காதைச்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை



காஞ்சி

மலர் 1 28—2—64 இதழ் 27, 28, 29

புதிய திருப்பம்

இருமொழிக் கொள்கையை உருவாக்கிட, சட்ட வடிவத்தைப் பெறத்தக்கவிதமாக, 1963ல் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தி அமைத்திட, முதன் மந்திரிகள் மாநாடு ஏற்பாடாகிறது என்ற செய்தியை இந்தியாவின் முதலமைச்சர் லால்பகதூர் அறிவித்தார்.

இப்போது தென்னகத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையில், மறைந்த பண்டித நேரு வாக்களித்திருந்த இருமொழிக் கொள்கை, (ஆட்சிமொழி சட்டத்தை அதற்கு ஏற்ற விதமாகத் திருத்தி அமைப்பதன் மூலம்,) அனைவருடைய அச்சத்தையும் போக்கத்தக்க வடிவம் பெற்றுகவேண்டும் என்பதனை வலியுறுத்தி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர் அறிவித்தார்.

இருமொழிக் கொள்கையை சட்ட வடிவம் கொள்ளச் செய்வதில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மாநில முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தெரிவித்தார்.

சட்ட நுணுக்கமறிந்தவர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோருடன் இதுபற்றிக் கலந்து பேசி ஒரு திட்டம் உருவாக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் வலியுறுத்திய சூழ்நிலை உருவாகிவிட்டதால் தமது விலகலைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அளகேசனும் அறிவித்தனர்.

முதன்மந்திரிகள் மாநாடு கூடுவதற்கு முன்பு அகில இந்திய காங்கிரசின் காரியக்கமிட்டி நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குடிஅரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் தமது பேருரையில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனை அறிவிப்புகளின் துணைபெற்று நடைபெற்ற முதன்மந்திரிகள் மாநாடு, இருமொழிக் கொள்கையை என்ன வடிவத்திலே உருவாக்கப் போகிறது, அந்தத் திட்டம் எந்த அளவு திருப்திகரமாக இருக்கும் என்பது, தரப்படும் சட்டதிருத்தத்தின் வாசகம், அந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது.

இந்த 'ஏற்பாடு' எந்த அளவுக்கு எவரெவரைத் திருப்திப்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க, இந்த இருமொழிக் கொள்கை உண்டாவதற்கு இருந்த காரணங்கள் மிக முக்கியமானவை என்பதை உணரவேண்டும்.

அரசியல் சட்டப்படி இந்தியக் கூட்டமைப்பின் ஆட்சி மொழியாக இந்தி ஒன்றுமட்டுந்தான் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது; அரசியல் சட்டம் துவங்கி 15 ஆண்டுகள் வரை ஆங்கிலம் தொடர்ந்து பயன் படுத்தப்படவேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டது.

அரசியல் சட்டப்படியும் அதனை ஒட்டி குடிஅரசுத் தலைவர் தந்த ஆணைப்படியும் இந்தியின் உபயோகம் வரவர விரிவாக்கப்பட்டும் ஆங்கிலத்தின் இடம் குறைக்கப்பட்டும் வந்தது.

இந்தி ஆதிக்கம் வளர்வதும், ஆங்கிலம் ஒதுக்கப் படுவதும், இந்தி பேசாத மக்களிடம் அச்சத்தை உண்டாக்கியது. தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகம் அறவழி நடத்தி இந்த மனப்போக்கை எடுத்து விளக்கிற்று. நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கத் துறைகளில் இந்தி திணிக்கப்பட்ட முறை, கழகம் எழுப்பிய கண்டனத்திற்கு வலிவளித்தது.

இந்தி பேசாத பகுதி மக்களின் அச்சம், கண்டனமாக மாறிவரும் நிலையில் பிரதம மந்திரியாக இருந்த பண்டிதநேருவும், குடிஅரசுத்தலைவர் டாக்டர் இராஜேந்திரபிரசாதும் அரசாங்கச் சார்பில் பல உறுதிமொழிகளைத் தந்தனர். அவற்றில் முக்கியமானது 1959:- செப்டம்பர் 4-ல் பாராளுமன்றத்தில் பண்டிதநேரு தந்த உறுதிமொழியாகும். இந்தி ஆட்சிமொழியாக வருவது பற்றி இந்தி பேசாத மக்கள் கவலைப்படுகின்றனர் என்பதை இந்த உறுதிமொழி சுட்டிக் காட்டியது.

அரசியல் சட்டத்தில் உள்ளதை அப்படியே நிறைவேற்ற அனுமதித்திருந்தால் 1965 ஜனவரி 26-க்குப் பின் இந்தி ஒன்று மட்டும் இந்தியாவின் ஆட்சிமொழி என்ற நிலை பிறந்திருக்கும்; ஆங்கிலம் அடியோடு அகற்றப்பட்டுப் போயிருக்கும்.

அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்ட காலவரையறை—1965 ஜனவரி 26 நெருங்க நெருங்க, இந்தி பேசாத மக்களின் அச்சம் அதிகரித்தது. ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கொண்டு வருவது சரியல்ல என்று பல்வேறு காரணங்களைக் காட்டி வலியுறுத்தப் பட்டது. இந்திக்கு உண்டான எதிர்ப்பு அலட்சியப் படுத்த முடியாததாக வளர்ந்துவிட்டது.

மற்றொரு வகையில், அரசியல்சட்டத்தை எழுதும் நேரத்தில் மிக உற்சாகமாக 15 ஆண்டுகளுக்குப் பின் இந்தி மட்டுந்தான் ஆட்சிமொழிஎன்று எழுதிவைத்துக் கொண்ட போதிலும், ஆட்சி மொழி என்ற கௌரவப் பெயரை ஆங்கிலத்துக்கு இந்திப் பிரியர்கள் தர மறுத்தாலும், ஆங்கிலத்தை அறவே நீக்கி விடுவது என்பது முடியாத காரியம் என்று அவர்களுக்கும் பட்டது. ஆட்சி மொழியின் முழுப் பொறுப்பையும் இந்தியிடம் தர இந்தியா தயாராகவில்லை; இந்தி பேசாத மக்கள் தயாராக இல்லை; இந்தி மொழியே தயாராக இல்லை.

ஆக இந்தி தனியாக ஆட்சிமொழியாக ஆவதற்கு இரு தடைகள் உண்டாயின; ஒன்று நேரடியாக இந்திக்கு உண்டான எதிர்ப்பு; இரண்டாவது, அதனுடைய இயலாத தன்மை. எனவே இரண்டு வகையிலும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த அவசியம், "ஆட்சி மொழிகள் சட்டம்" என்பதை உருவாக்கியது.

ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வழி வகை செய்யப்பட்டு விட்டது என்றும், நேரு தந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுகிறது என்றும் அரசாங்கச் சார்பில் கூறப்பட்டது. விரும்பினால் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம் என்று இருப்பது ஆங்கிலத்தின்

உபயோகத்தைக் குறைத்து, இந்தி ஆதிக்கத்துக்கு இடம் ஏற்படுத்தும் என்று, தி. மு. கழகமும் மற்ற இந்தி எதிர்ப்பு உணர்வினரும் கருதினர். நேரு உறுதி மொழி அந்தச் சட்டத்தில் இடம்பெறவில்லை என்பதனை இதற்காக எடுத்துக் காட்டப்பட்டது.

1965 ஜனவரி 26 நெருங்க நெருங்க, இந்தித் திணிப்பு புதுவேகத்தை அடைந்தது. இந்தி பற்றி அரசாங்க உத்திரவுகள் வந்தபடி இருந்தன. இந்தி ஆதிக்கக்காரரின் குதூகலமும் பெருமிதமும் வெளிப் படையாகத் தெரிந்தன.

எல்லாம் அரசியல் சட்டப்படிதான் நடைபெறு கிறது என்று அரசாங்கச் சார்பில் கூறப்பட்டது; இந்தி பேசாத மக்களின் அச்சத்தை இந்தப் பேச்சு குறைக்க வில்லை; மாறுக அச்சம் வளர்ந்தது. சட்டப்படி நடந் தால், இந்திதான் ஆட்சிமொழி என்பது தெளிவாக இருந்தது. எனவே இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க வேண்டுமென்றால் சட்டபூர்வமான பாதுகாப்பு இருந்தா லொழிய வேறு வழியில்லை என்பது தெளிவாயிற்று. இந்தத் தெளிவு, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒரு தனிக் கட்சி நடத்துவது என்ற நிலையிலிருந்து, அனைவரின் கவனத்தையும் ஆதரவையும் ஈர்த்திடும் பெரிய பிரச் சினையாகிட உதவிற்று. மாணவர் எழுச்சி பீறிட்டுக் கிளம்பிற்று. ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தி ஆட்சிமொழியாக வருவதை தென்னாடு—இந்தி பேசாத பகுதி — ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் கிளர்ச்சி எடுத்துக் காட்டிற்று.

எதிர்ப்புணர்ச்சி பொங்கி எழுந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த முதலமைச்சர் இந்த நேரத்தில்தான், "இரு மொழிக் கொள்கைக்காக வாதாடப் போவதாகவும், அதற்காக சட்ட ஏற்பாடு பெறப் போவதாகவும்" அறிவித்தார்.

1965-ஜனவரி 26-க்குப்பின் திடீரென எதுவும் நிகழவில்லை என்றும், நேரு வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது, என்றும் இந்தியப் பிரத மர் லால்பகதூர், பேசிக்கொண்டும், அறிக்கை தந்து கொண்டும், வானொலிப் பேருரை நிகழ்த்திக்கொண்டும் இருந்த நிலையில், தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், பிரதமரின் விளக்கம் போதாது, என்பதனை எடுத்துக் கூறும்விதமாக, "இருமொழிக் கொள்கை சட்டபூர்வமாக ஏற்பட்டாகவேண்டும்" என்று பேசியது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, எத்தனைதான் அவர் கண்டித்தபடி இருந்தபோதிலும் அவருடைய மனம் மாறிவந்திருக்கிறது என்பதனையும் எடுத்துக்காட்டு கிறது.

இதற்கு முன்பு எப்போதும் அவர் கூறுதது, இரு மொழிக்கொள்கைக்கு சட்டவடிவம்வேண்டும் என்று இப்போது பேசியது.

நேருவின் வாக்குறுதிபோதும் என்றும், அதுநிறை வேற்றப்படுகிறது என்றும், லால்பகதூர் சர்க்கார் நேருவின் வாக்குறுதிப்படி நடந்துகொள்ளும் என் பதிலே தமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் பேசிப்பேசிப் பழக்கப்பட்ட முதலமைச்சர் பக்தவத் சலம் அவர்கள், திடீரென இருமொழிக்கொள்கை சட்டவடிவம் பெற்றுகவேண்டும் என்று பேச முற்பட் டது டில்லி வட்டாரத்தைத் திடுக்கிடச் செய்திருக்கும், காங்கிரஸ் வட்டாரத்தினரையும் ஒரு குலுக்கு குலுக்கி இருக்கும். இன்று ஆட்சிமொழிச் சட்டத்தைத் தக்க விதத்தில் திருத்தி, நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப் படத்தக்க பாதுகாப்பு பெற்றுகவேண்டும், இருமொழிக் கொள்கை சட்டத்தில் இடம்பெறவேண்டும், இப்போது உள்ள சட்டம் போதாது என்று பேசும் இதே முத லமைச்சர் அதே சட்டம் குறைபாடுடையது என்று 1968-ல் பலர் எடுத்துக்காட்டியபோது, ஏற்கமறுத் தவர்; சட்டத்தை முழுத் திருப்தியுடன் வரவேற்றவர். இப்போது அவருக்கே, ஆட்சிமொழிச் சட்டம் தக்க விதமாகத் திருத்தப்பட்டால்தான், இருமொழிக் கொள்கை நடைமுறையில் வெற்றிபெறும், நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாக ஆகும் என்று தெரியவருகிறது.

இவருடைய நிலையிலேயே இந்தவிதமான மாறுதல் ஏற்பட்டது என்றால் மற்ற மற்ற காங்கிரஸ் தலைவர்கள் வேகவேகமாக இருமொழிக்கொள்கைக்காகச் சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற கருத்தின் பக்கம் வந்து நிற்பதிலே வியப்பு ஏதுமில்லை.

எழுச்சிமிக்க அணிவகுப்பினை நடத்திக் காட்டி விட்டீர்கள், ஏற்புடையது உமது எழுச்சி என்று அனைவரும் பாராட்டுதலை வழங்கியுள்ளனர், உமது எழுச்சி காரணமாக இந்தி ஆதிக்கத்துக்கு எத்தகைய எதிர்ப்புணர்ச்சி உருவாகி இருக்கிறது என்பதனை இந் தியப் பேரரசு உணர்ந்துவிட்டது, ஏதாகிலும் ஒருவித மான தீர்வு கண்டாகவேண்டும் என்ற நிலைக்குப் பேரரசு இப்போது வந்துவிட்டிருக்கிறது, இந்தப் புதிய போக்கு காரணமாக என்ன கிடைக்கிறது, எவரெவர் இதற்காக முயற்சி மேற்கொள்ளப்போகிறார்கள் என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும், பிரச்சினையை இனி மற்றவர்கள் கவனித்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும், எனவே போராட்டத்தை மாணவர்கள் விட்டுவிடவேண்டும், நேரடி நடவடிக்கைகள் கூடாது, நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டவுடன், தூய இயக்கத்தைப் பாழ்படுத்தி மகிழும் தீய சக்திகள் நுழைந்துகொண்டுவிடும், ஆகவே நேரடி நடவடிக்கை களில் ஈடுபடக்கூடாது என்று மாணவர்களைக் கேட்டுக் கொண்டேன். அந்த அறிக்கைக்கு உடனடியாகப் பலன் ஏற்படவில்லை. பிறகு, தமிழகத்தில் நடைபெற் றவைகளை இப்போதுகூட எண்ணிப்பார்க்கும்போது நெஞ்சு நடுக்குறுகிறது. எவை எவை நடைபெறக் கூடாதோ அவைகளெல்லாம், எவை எவைகளைத் தமிழ்ப் பண்பாடு ஏற்காதோ அவைகளெல்லாம் நடை பெற்றுவிட்டன. நாடே அதிர்ச்சி அடைந்துவிட்டது. பெரும் இழப்புகள், கொடூரங்கள் நடைபெற்றுவிட்டன.

இது குறித்து சுதேசமித்திரன் வாரமலர், "கடந்த வாரம் தமிழகம் கண்ட பயங்கர ரணகளம் குறித்துப் பேரதிர்ச்சியும் ஆழ்ந்த வருத்தமும் அடையாதவர் இருக்க முடியாது. ஆனால் வருந்தி மட்டும் பயனில்லை; அவதியுற்றவர்களுக்கு வெறும் அனுதாபம் தெரிவிப்ப தாலும் ஆவதொன்றுமில்லை. இனி ஒருபோதும் அவ் விதம் நடக்கவிடக்கூடாது. அதுவே அனைத்திலும் முக்கியம்." என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

நடைபெற்றவைகளுக்கான காரணங்களை ஆராய் வதும், புகார் கூறிக்கொண்டிருப்பதும், பயன் அளிக்கப் போவதில்லை.

அடக்குமுறைக்கு மத்தியிலும் வன்முறை எழாத நிலையை ஏற்படுத்திக் கட்டிக்காத்திட வேண்டும்; அது இயலாது என்று தோன்றுமானால், தெரியுமானால், எத்தனை தூய்மையான நோக்கத்துக்காக எவ்வளவு எழுச்சியுடன் நடத்தப்படும் கிளர்ச்சியாயினும் அது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதுவே அற நெறி வழுவாத முறை.

அடக்குமுறை அத்துமீறிப் போய்விட்டதனால் வன்முறை என்பது வாதம்; நியாயமாகாது.

வன்முறை ஏற்பட்டுவிட்ட பிறகு அரசு, சட்டமும் அமைதியும் காப்பாற்றப்படுவதற்காக என்று காரணம் காட்டி, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட வழி கிடைத்துவிடுகிறது. இதன் தொடர்பாக, கழகப் பொருளாளர் கருணாநிதி பாதுகாப்புச் சட்டப்படி கைதாகினர் என்பதும், கழகத் தோழர்கள் பலர் கைது செய்யப்படுகின்றனர் என்பதும், நமது உள்ளத்துக்கு எத்தனை உளைச்சலை ஏற்படுத்தினாலும், நாமும் நமது கழகமும், நிதானம் இழந்திடாத, எதனையும் பொறுத்துக்கொள்ளக்கூடிய மனதினர் என்பதனை நினைவிற் கொள்ளவேண்டும். இப்போது நாட்டுக்கு மிக மிகத் தேவைப்படுவது, உடனடியாகத் தேவைப்படுவது, அமைதி. பகை உணர்ச்சிகள் மடிந்திட வேண்டும், மறச் செயலினை வெறுத்து ஒதுக்கிட வேண்டும், அற நெறி பாதுகாக்கப்பட்டாக வேண்டும், சமூகத்தில் கலவரமும் பீதியும் ஏற்படக்கூடிய எந்தச் செயலையும், சொல்லையும் தவிர்க்கவேண்டும். எல்லாத் துறையினரும் எல்லா வகையினரும், எல்லா வகைகளிலும் நெஞ்சு வெடித்திடத்தக்க இழப்புகள் பெற்று, தமிழகம் தத்தளித்து விட்டிருக்கிறது. கண்ணீரும் இரத்தமும் எங்கெங்கும். இந்த நிலை, எவ்விதமாக ஏற்பட்டுவிட்டிருப்பினும் எவரும் இதனை ஏற்புடையது என்று கருதமாட்டார்கள்; குறிப்பாக ஆண்டு பலவாக அறநெறிக் கிளர்ச்சிகள் பல மேற்கொண்டு, அமைதிக்கோ ஒழுங்குக்கோ, உயிருக்கோ உடைமைக்கோ ஒரு சேதமும் ஏற்படாதபடி, கிளர்ச்சி என்பது இலட்சிய வெற்றிக்காக மேற்கொள்ளப்படும் தூயபணி என்பது மெய்ப்பிக்கப்படத்தக்க விதமாக நடந்துகொண்டு வந்துள்ள நமது கழகம், தீச்செயல்கள் தலைவிரித்தாடிடத்தக்க சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடிய கிளர்ச்சிகளை ஆதரிக்காது—ஆதரித்ததில்லை. இந்த நமது நிலையினை ஏற்க மறுத்து அரசு நம்மில் பலரைக் கைதுசெய்திடினும், கழகத் தோழர்கள், நீதிவெல்லும் என்ற நம்பிக்கையுடன், அமைதிகாத்து, அறநெறி நின்றுவரவேண்டும். நடைபெற்றவைகளை எண்ணி எண்ணி வேதனைப்பட்டு, புண்பட்ட உள்ளத்திலிருந்து வெளிவரும் என் வேண்டுகோள் இது. என்போன்றே நாட்டிலே, பலரும் எண்ணம் தெரிவித்துள்ளனர். அனைவரும் அமைதி காத்திட, அறநெறி நின்றிடவேண்டும் என்பதே இன்று தமிழகத்தின் வேண்டுகோள்.

இந்தித் திணிப்பே கிடையாது என்றும், இந்தி மட்டுமே ஆட்சிமொழி ஆகவேண்டும் என்றும், பேசிக் கொண்டு வந்த காங்கிரஸ் வட்டாரத்திலேயே இப்போது இந்தி திணிப்பு இருக்கிறது என்ற உணர்வும், இந்தித் திணிப்பு கூடாது என்ற உறுதியும், இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும்என்பதனை இந்தி பேசாத பகுதி ஏற்றுக்கொள்ளாது, ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற எண்ணமும் ஏற்பட்டு வருகிறது. பல காங்கிரஸ் தலைவர்களும், அமைப்புகளும் இந்தக் கருத்தினைத் தெரிவித்திருப்பதனை அனைவரும் அறிவர். பண்டித நேருவின் வாக்குறுதியே போதும், இதனை உறுதிப்படுத்தவும் செயல்படுத்தவும் சட்ட வடிவம் வேண்டும் என்ற கருத்தினை இதுவரை மறுத்துக் கொண்டும் எதிர்த்துக்கொண்டும் வந்திருந்தகாங்கிரஸ் கட்சியினர் இப்போது சட்டம் வேண்டும் என்று வலியுறுத்த முற்பட்டுவிட்டுள்ளனர். ஆங்கிலம் அகற்றப்பட்டுவிடக்கூடாது என்பதற்கு ஆதரவான தீர்மானம், சில நகராட்சிகளில், கட்சி வேறுபாடின்றி, காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும் புதிய போக்குக்கான அறிகுறிகள்; மொத்தத்தில் புதியபோக்கு ஏற்பட்டு வருகிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பது இதனால் விளக்கமாகிறது. இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சினை, காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளின் நடவடிக்கை அல்லது கிளர்ச்சி என்பது மாறி, இந்தி ஆதிக்கத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கும் இந்தி பேசாத பகுதியினருக்கும் உள்ள உறுதிக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட பிரச்சினை என்றாகிவிட்டது. இது முக்கியத்துவம் வாய்ந்த புதிய திருப்பம்.

இந்தக் கட்டத்திலேதான் முதன் மந்திரிகள் மாநாடு. இருமொழிக் கொள்கையின் வடிவம் அதன் நடைமுறை ஆகியவை இனித்தான் தெரியவரும்; தெரிந்த பிறகுதான் அது குறித்து நாம் விரிவான கருத்தளிக்க இயலும்.

இருமொழிக் கொள்கை நல்லமுறையில் திட்டமிடப்பட்டு நல்ல எண்ணத்தில் நிறைவேற்றப்படும் என்றுல்கூட, அது இந்தியாவின் மொழிப்பிரச்சினையை நிரந்தரமான முறையில் தீர்த்துவிடாது.

ஆனால், ஒரு புதிய போக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப்பார்த்தால், நம்பிக்கைக்கு வழி ஏற்படும்.

இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி, ஆங்கிலம் எந்தக் காரணத்தைக்கொண்டும் துணை ஆட்சிமொழியாகக்கூட இருக்க அனுமதிக்கப்போவதில்லை என்று கூறிக்கொண்டிருந்த பிடிவாதம் உடைபட்டுவிட்டிருக்கிறது. இந்தி பேசாத பகுதியினர் விரும்பினாலொழிய ஆங்கிலம் அகற்றப்படமாட்டாது என்று கூறிடவும் வாக்குறுதிகளைத் திரும்பத் திரும்ப வழங்கவும், வழங்கப்படும் வாக்குறுதிகளை நம்ப இயலாது, சட்டத்திலே அது ஏற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதால் இப்போது ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தவும் இந்தியப் பேரரசு முன்வந்திருப்பது, புதிய போக்கு ஏற்பட்டிருப்பதை விளக்குகிறது.

இந்தி ஆங்கிலம் என இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக சட்டப்படி இயங்கும் என்ற திட்டமும் தற்காலிக திட்டந்தான்; ஆனால் முன்பு இருந்து வந்ததைவிட ஒருபடி முன்னேறிய திட்டம். இந்தி எதிர்ப்பாளர்களின் குரலை மதித்தாக வேண்டும் என்ற நிலைக்கு இந்தியப் பேரரசு வந்திருக்கிறது—வரவேண்டியாகிவிட்டது—என்பதை எடுத்துக் காட்டும் திட்டம், ஒரே ஒரு மொழிதான் ஆட்சிமொழி என்ற கொள்கை தளர்த்தப்பட்டு, இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக இயங்கலாம் என்பது—கருத்து அளவுக்காவது—ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது,பழையபிடிவாதம்தகர்ந்து வருகிறது என்பதனைத்தான் எடுத்துக் காட்டுகிறது.


இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் அளவையும் உணர்ச்சி வலிவையும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில் இந்தியப் பேரரசு இருமொழிக் கொள்கை என்ற இந்த அளவுக்கு இறங்கி வந்திருக்கிறது.

எட்டுஆண்டுகளுக்கு முன்பு இராஜாஜோபாலாச்சாரியார் இந்த இருமொழிக் கொள்கையை வலியுறுத்தியபோது ஏற்கமறுத்த அரசு இப்போது, இந்தி பேசும் பகுதி இந்தி பேசாதார் பகுதி எனும் இரு பிரிவினருக்கும் சமரசமாக இருமொழிக் கொள்கையும் திட்டமும் இருக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

இருமொழிக் கொள்கை என்பது சட்ட அமைப்பில் தெளிவு, நடைமுறையில் நேர்மை ஆகியவை சரியாக இருந்தால்கூட, இந்தி பேசாத மற்றவர்களுக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

கைதி எண் 6342



தம்பி!

3—5—64

நாளையத்தினம், மதியும் மற்றும் சிலரும் விடுதலை செய்யப்படப்போகிறார்கள் என்று சிறையிலே ஒரு பேச்சு பலமாக அடிபடுகிறது. நானேகூட நம்பிக்கை கொள்ளவேண்டி ஏற்படுகிறது. வெளியில் சென்றதும் தொகுதி திருத்தி அமைப்பதுபற்றி மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்து பேசும்படி மதியிடம் கூறினேன், இன்றும் மறுபடியும் தொகுதிகள்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம், ஏற்கனவே சிறைபட்டிருப்பவர்கள் குறித்தும், வழக்கின் முடிவுக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்கள்பற்றியும், பேசிக் கொண்டிருந்தோம். கழகம் வகுத்த திட்டத்திலே தோழர்கள் தொடர்ந்து காட்டிக்கொண்டு வரும் ஆர்வமும், மக்கள் தரும் ஆதரவும் அளித்திடும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் நிலையில், சிறையிலே ஏற்படக்கூடிய தொல்லைகள் மிகச் சாதாரணமானவைகளாகிவிடுகின்றன. ஒன்று மட்டும் மறப்பதற்கில்லை, வேறு எந்தக் கட்சிக்காரர்கள் கிளர்ச்சிக்காரர்களிடமும் காட்டாத அளவுக்குக் கசப்பும் கோபமும் இன்றைய ஆளுங்கட்சினர், கழகத்திடம் காட்டுகின்றனர்என்பதை உணர்ந்துள்ள அதிகாரிகள் அதற்குத் தகுந்தபடி தமது போக்கை அமைத்துக் கொண்டுள்ளனர். முன்போல அல்ல! இது ஒரு மாதிரியான காலம்! என்று சிறை காவலாளிகளேகூடப் பேசிக்கொள்கிறார்கள். எங்களிடம் பேசவும் பழகவும் கூடப் பயப்படுகிறார்கள். ஆனாலும், சென்னை மாநகராட்சிமன்றத் தேர்தல் வெற்றியைக் கண்டபிறகு, அவர்களுக்கே ஒரு எண்ணம் — சர்க்காருடைய கொடுமை வளரவளர, பொதுமக்களுடைய ஆதரவு கழகத்துக்கு வளரத்தான் செய்கிறது என்ற எண்ணம். இதை அவர்கள் பாபம், பேச்சின் மூலமாக அல்ல, பார்வையின் மூலமாகவே தெரிவிக்கிறார்கள். சில வேளைகளிலே அவர்கள் காட்டும் கண்டிப்புகூட, 'ஜான் வயிற்றுக்காக என்கிறார்களே, அதுதானே தவிர, எங்களிடம் கோபமோ வெறுப்போ இல்லை என்பதையும் உணருகிறேம். காவலாளிகளின் வாழ்க்கையும், எவரும் பார்த்துப் பச்சாதாபப் படக்கூடியது தான்.

இன்று சீக்கிரமாக 'லாக்கப்' செய்துவிடவேண்டும் என்று சில காவலாளிகள் துடித்துக்கொண்டு வருவார்கள்—காரணம், எங்களை வெளியே ஒரு அரைமணி நேரம் விட்டுவைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணம் அல்ல, ஒவ்வொருநாளும் வேலை முடிந்து, அந்தக் காவலாளிகள் வீட்டுக்குப் போய்ச்சேர, இரவு ஒன்பது ஆகிவிடுகிறது. ஒரு நாளைக்காவது வீட்டிலே, பொழுது சாயுமுன் போய், குழந்தை குட்டிகளுடன் பொழுது போக்கவேண்டும் என்ற ஆவல் இருப்பது இயற்கை தானே. மொத்தத்திலே இங்கு பார்க்கும்போது, காவலாளிகளின் எண்ணிக்கை மிகக்குறைவு என்பது புரிகிறது. அதனால்தான், காவலாளிகள் கடினமான வேலையில் உழலவேண்டி இருக்கிறது. காவலாளிகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும் — அப்போதுதான், அளவுக்கு மீறிய வேலை செய்வதால் ஏற்படும் சலிப்பு உணர்ச்சி எழாமலிருக்கும். 'வாங்க! வாங்க! மணி ஆறு அடிச்சாச்சி' என்று கூப்பிட்டார் ஒரு காவலாளி, கீழே இருந்த எங்களை. குரல் கேட்டதும் இயற்கையாக, இதற்குள்ளாகவா? என்றுதான் கேட்கத் தோன்றும். ஆனால், அந்தக் காவலாளியின் முகத்தைப் பார்த்ததும், எனக்கு உடனே எழுந்து, மாடிக்குச் சென்றுவிடவேண்டும் என்றுதான் தோன்றிற்று. ஏன் என்றால், அவருடைய பேச்சு, அவ்விதம் இருந்தது.

"மூணு ஜென்மம் ஆயிட்டுது. இன்னும் இருப்பது சாராயக்கேஸ் தண்டனை காலம்தான்" — என்று தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டார். புரியவில்லையா?

மூணு ஜென்மம், முப்பது ஆண்டுகள்! ஒரு ஆயுள் தண்டனை, கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள்—ஒரு ஜென்மம். அதுபோல மூணு ஜென்மம் அளவுக்கு, அதாவது முப்பது ஆண்டுகள் வேலை பார்த்தாகிவிட்டதாம். காவலாளி, தன் வேலை நாட்களை, கைதியின் தண்டனை நாட்கள் போன்றவை என்று எண்ணுகிறார் — ஏக்கத்துடன் பேசுகிறார். நாலுவாரம் தண்டனை என்பது சாராய வழக்கிலே கிடைப்பது; இந்தக் காவலாளி இன்னும் நாலு வாரம்தான் வேலையில் இருப்பாராம் —

பிறகு விலகப்போகிறார். வேலையில் இருக்கவேண்டிய நாட்களை, தண்டனை நாட்கள் என்று கருதுகிறார். காவலாளிகளின் வேலை நேரம்—வேலை முறை—இவைகளைப் பார்ப்பவர்கள், அந்த வயதானவர் கூறினதை மறுக்கமாட்டார்கள்.

4—5—64

ஏமாற்றம்! எதிர்பார்த்தபடி, மதிக்கும் மற்றவர்களுக்கும் விடுதலை கிடைக்கவில்லை; காரணமும் தெரியவில்லை. வழக்கமாக உலவும் வதந்திகளின்படி சர்க்காரிடமிருந்து 'உத்திரவு வரவில்லை' என்று தெரிய வருகிறது. உண்மை என்னவென்றால், விடுதலை ஆகப் போகிறார்கள் என்ற செய்திதான், ஆதாரமற்றது, வதந்தி.

இன்று, S. S. ராஜேந்திரன் வந்திருந்தார். நான், மதி, அன்பழகன் மூவரும் கண்டு பேசினோம். சிறை மேலதிகாரியின் அறையில், அவர் முன்னிலையில். நண்பர்களைக் குறித்துக் கேட்டறிந்துகொண்டோம்.

"அண்ணு! ரவி என்ன சொல்கிறான் என்பதைக் கேளுங்களேன்" என்று பாசத்துடன் ராஜேந்திரன் கூறினார்; ரவி அவர் மகன்.

"அண்ணு! ஜெயில் கதவோட கம்பிகளை எடுத்துட்டு வெளியே வந்துவிடுங்க." என்கிறானே!

சிறை மேலதிகாரியைக் காட்டி, "இவர் யார் பார்த்தயா? சும்மாவிடுவாரா?" என்றேன்; குழந்தை, பயந்தே போனான். இதற்கு முன்பு எப்போதும் என்னைப் பார்த்திராத முற்றிலும் வேறான இடம். அதனால் அச்சம் ஏற்பட்டுவிட்டது. இல்லையென்றால் மிகக் கலகலப்பாகச் சிரித்துப் பேசுவான். நான், அவனுக்கும் "அண்ணு" அவனுடைய அப்பாவுக்கும் "அண்ணு" அப்படி அழைத்தே பழகிவிட்டான்.

பார்க்க வருகிறவர்களும், மிகுந்த ஆவலுடன் ஏதேதோ பேசவேண்டும் என்றுதான் வருகிறார்கள். நாங்களும், வருகிறவர்களிடம் நிறையப் பேசவேண்டும், எதை எதையோ கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவலாகத்தான் பார்க்கிறோம். ஆனால், பேசும் இடத்தில்; குறைந்தது இரண்டு அதிகாரிகளாவது எதிரே, மிக அருகாமையில், உட்கார்ந்து கொள்ளும்போது, எப்படிப் பேசவரும், எதைப் பேசத் தோன்றும், பார்த்தோம், நலன் கேட்டறிந்து கொண்டோம், அது போதும் என்று சில நிமிடங்களிலேயே தோன்றிவிடுகிறது, அப்படித்தான் இன்று ராஜேந்திரனிடமும், மிகச் சுருக்கமாகவே பேச்சை முடித்துக் கொள்ள வேண்டி நேரிட்டது. டில்லி போய் வந்த 'சேதி' பற்றி ஒரு விநாடி, நாராயணசாமி மகன் உடல் நிலை பற்றி மற்றொர் விநாடி, இப்படி மூன்று நான்கு விஷயங்கள் பேசி முடித்ததும் மேற்கொண்டு என்ன பேசுவது என்பது இருவருக்கும் புரியவில்லை. பேச விஷயமா இல்லை! கழக விஷயம் பேச ஆரம்பித்தால், நாள் போதாது. ஆனால் 'அரசியல்'தான் பேசக் கூடாதே!!

இதைக் கூடவா சர்க்கார் கவனிக்கிறார்கள்? என்று நான் ஒரு சிறை அதிகாரியைக் கேட்டேன். "சரியாப் போச்சி. உங்களுக்கென்ன தெரியும்? உங்களைப் பார்க்க யாரேனும் கழகத்தார் வந்தார்கள் என்றால் அவர்கள் உங்களைப் பார்த்துவிட்டுப்போன உடனே, துப்பறியும் துறைக்காரர் வருகிறார், என்ன பேசினார்கள்? என்று கேட்கிறார். விவரம் விசாரிக்கிறார்" என்று கூறினார். கள்ளமார்க்கட்காரனையும் கொள்ளை இலாபம் அடிப்பவனையும், கண்டு பிடித்து அடக்க இந்தத் துப்பறியும் திறமை பயன்படக் கூடாதா? எதையும் ஒளிவு மறைவு இல்லாமல், மக்களுக்கும் சர்க்காருக்கும் அறிவித்துவிட்டுச் செய்யும் எங்கள் கழக சம்பந்தமாகவா. இவ்வளவு திறமையையும் வீணாக்க வேண்டும்? என்று நான் கேட்டேன். "அதெல்லாம் பெரிய விஷயம்..." என்று சொல்லிக்கொண்டே அந்த அதிகாரி சென்று விட்டார். இந்தப் பேச்சை எவனாவது கேட்டுவிட்டு, ஏதாவது கோள்மூட்டி விடப்போகிறான் என்று அவருக்குப் பயம். சுயராஜ்யம் ஏற்பட்ட பிறகு தொடங்கிய இந்தப் 'பயம்', நாளாகவாக வளர்ந்தபடி இருக்கிறது. அதிலே ஒரு கூறுதான் இங்குள்ள அதிகாரிகளின் போக்கிலே நான் காண்கிறேன். இத்தகைய பயம்; ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல. ஆனால். நடை பெறுவது பெயரளவுக்குத்தானே ஜனநாயகம்.

இன்று நடைபெற்று வரும் போக்குக்கு, காஞ்சீபுரம் கே. டி. எஸ். மணி ஒரு எடுத்துக் காட்டு கூறினார்,

கே. டி; எஸ். மணி, திருவேங்கிடம் இருவரும், காஞ்சீபுரம் நகராட்சி மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் கைது ஆகிச் சிறையில் இருந்தனர்—வழக்கு முடிவு பெற வில்லை. இடையில், நகராட்சி மன்றத் தலைவர் தேர்தல். இருவருடைய ஓட்டுகளும், கழக வேட்பாளருக்குக் கிடைக்காதபடி தடுத்துவிட்டு, வேறு சில வேலைகளையும் செய்து முடித்துக் கொண்டால், காஞ்சீபுரம் நகராட்சி மன்றத் தலைவராக ஒரு காங்கிரஸ்காரரைத் தேர்ந்தெடுக்கலாம் என்பது காங்கிரசின் திட்டம். இதைத் தெரிந்துகொண்ட நமது கழகத்தவர், மணி; திருவேங்கிடம் இருவரையும் 'பொறுப்பில்' வெளியே கொண்டுவரவேண்டும், தலைவர் தேர்தலில் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினர்—பொறுப்பிலே விடுதலை செய்யப்பட்டனர்.

வேடிக்கை என்பதா, விபரீதம் என்பதா. கூறுங்கள், பொறுப்பிலே விடுதலை செய்யப்பட்ட இரு தோழர்களும் காஞ்சீபுரம் திரும்பினார்கள்; மறுநாளே பொறுப்பு ரத்து செய்யப்பட்டு சிறைக்கு மறுபடியும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். காஞ்சீபுரத்துக் காங்கிரஸ்காரர்கள் கைகொட்டிக் கேலியாகச் சிரிக்காமலிருக்க முடியுமா! பயல்களை மறுபடியும் உள்ளே தள்ளியாச்சி! என்று எக்காளமிடுகின்றனர்.

முன்னாள் பொறுப்பிலே விடுதலை—மறுநாள் அந்த உத்திரவு திரும்பப் பெறப்படுகிறது; மறுபடியும் சிறை

யார் காரணம் கேட்பது? எவருக்கு இதற்கான விளக்கம் புரிகிறது! போக்கு எவ்விதம் இருக்கிறது என்பதுதான் நன்றாகத் தெரிகிறது. தெரிந்து?

உயர்நீதிமன்றம் சென்று, அந்த இருதோழர்களுக்கும், மறுபடியும் பொறுப்பிலே விடுதலைக் கிடைத்து, அவர்கள் தேர்தலில் கலந்துகொண்டு, கழகத்தவரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்விதமான போக்கு குறித்து பேசிக்கொண்டிருந்தோம். இதற்குத் தனித்தனியான பரிகாரம்கிடையாது; ஒரே கட்சிதான் நாட்டை ஆளும் என்ற நிலைமையை மாற்றி அமைத்து, உண்மையான மக்களாட்சியை ஏற்படுத்துவது ஒன்றுதான், விரும்பத்தகாத முறைக்கேடுகளையும், விபரீதமான போக்கினையும் ஒழித்துக் கட்டும் வழி என்று கூறினேன். நண்பர்களின் கண்கள், அடுத்து வர இருக்கும் பொதுத் தேர்தலின்மீது பாய்ந்திடக் கண்டேன். விழிப்புடன் இருக்கிறார்கள், உறுதியுடன் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இனிப் பளித்தது.

5—5—64

ஓவியம் வரைவதிலே, மற்ற இரு நண்பர்களும் அக்கரை இழந்துவிட்டனர்; நானே தொடர்ந்து அதிலே விருப்பம்கொள்கிறேன். இரவு வெகுநேரம் வரையில், வண்ணங்களைக் கலப்பதும், எதை எதையோ வரைவதும், மனதுக்குப் புதுவிதமான மகிழ்ச்சி தரத்தான் செய்கிறது. நண்பர்கள் என்னை மகிழச் செய்வதற்காக, ஓவியம் நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது; கண் இல்லையா காண! ஓவியம் வரையத் தெரியாவிட்டாலும், வண்ணங்களைக் குழைத்து எதையாவது வடிவமெடுக்கச் செய்யும்போது களிப்பு எழுகிறது. ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள், அந்தக் கலையில் எத்துணை இனிமை காணமுடியும் என்பதனை உணர இது ஒரு வாய்ப்பு. மலையும் மடுவும், மாவும் பலாவும், காலைக் கதிரவனும் மாலை மதியமும், கோட்டைகொத்தளங்களும் கொடி படர்ந்த குடிலும், வாளேந்திய வீரனும் வேல் விழியாளும், பாசம் நிறைந்த பார்வையும் பகைகக்கும் விழிகளும், மழலைமொழிக் குழவியும் பெருமிதமிகு தாயும், இன்னுரைன்ன பிற காட்சிகளைத் தமது கைவண்ணத்தால் ஓவியர்கள் உயிர்பெறச் செய்யும்போது; தனித் தன்மை வாய்ந்த ஓர் மகிழ்ச்சி பிறக்கத்தான் செய்யும், ஓவியக் கலையினர் குறித்து, நான் படித்திருந்த சிறு கதைகள், நெடுங்கதைகள் பலவும் இந்த நேரம் என் நினைவிற்கு வருகின்றன.

இன்றுகூட, உட்அவுஸ் என்பவர் எழுதியுள்ள ஒரு கதைத் தொகுப்பில் ஓவியம்பற்றிய தொடர்புடைய சிறு கதை ஒன்று படித்தேன். ஓவியம் வரைவதிலே விருப்பம் மிகுந்திருந்த வேளை—எனவே அந்தச் சிறு கதை எனக்கு அதிக அளவு சுவை அளித்தது.

ஓவியம், நூல் எழுதுதல், இசைபயிலுதல், நடனம் போன்ற நுண்கலைகளில் பெரிதும் நாட்டம்கொண்டு, ஆண்டுக் கணக்கில் ஈடுபட்டு, வறுமையால் தாக்கப் பட்டபோதிலும், உலகம் பாராட்டத்தக்க கலைத்திறனை ஒரு நாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் பெறத்தான் போகிறோம், பொன்னும் பொருளும் வந்து குவியத்தான் போகிறது என்ற நம்பிக்கையின் துணையுடன் உழல்பவர்களைக் குறித்து, நம் நாட்டில் உள்ளவற்றினைவிட, மேலைநாடுகளில் அதிக அளவுள்ள கதைகள், கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்துள்ளன.

உட்அவுஸ், நகைச்சுவைததும்பும் எழுத்தோவியம் புனைபவர்—வாழ்க்கைச் சிக்கல், பிரச்சினைகள் ஒன்றோடொன்று மோதிப் போரிடுதல் போன்றவைகளைவிட, அசட்டுத்தனம், பொலிகளில் மதிப்புவைத்திடும் பான்மை, மேட்டுக்குடியினரின் மேனுமினுக்கித் தன்மை போன்றவைகளைப்பற்றி அதிகச் சுவையுடன் எழுதுபவர் — எனினும், அந்த எழுத்தோவியத்தில் வெறும் நகைச்சுவை மட்டுமல்ல, இழையோடுவது போல நல்ல கருத்தும் இருக்கும்.

ஒரு வீட்டின் மாடி அறையில் ஒருவன் குடி இருக்கிறான்; கீழ் அறையில் ஒரு பெண் குடி இருக்கிறாள்; வீட்டின் மற்ற மற்றப் பகுதிகளிலும் இதுபோலப் பலர் குடி இருக்கிறார்கள். வாடகை வீடு.

கீழ்தளத்தில் குடி இருக்கும் பெண், இசைத்துறையில் வெற்றிபெற விரும்பி வெகுபாடுபடுபவள்; பாடல்கள் புனைகிறாள், பாடிப்பார்க்கிறாள், இசைக் கருவியின் துணையைச் சேர்த்து சுவை எங்கனம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள முனைகிறாள். சிலருக்கு இசைப் பயிற்சி அளிப்பதிலே கிடைக்கும் சொற்ப ஊதியத்தை வைத்துக்கொண்டு, புன்னகை தரும் பொற்காலம் வரப்போகிறது என்று காத்துக்கொண்டிருக்கிறாள்.

மாடி அறையில் குடி இருப்பவன், இந்தப் பெண்ணுடைய இசை ஈடுபாட்டைக் கேலிப்பதுபோல அறையின் தரையில் தட்டி ஒலி எழுப்புகிறான். அவளோ இசை நுணுக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, தான் புனையும் பாடல், இசை உலகினரால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க தரம் பெற என்ன செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் அல்லற்படுகிறாள்! மேலே இருந்து கிளம்பும் ஒலியோ அவளுடைய மனநிலையை, சிந்தனைத் திறனைக் கெடுக்கிறது. பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறாள், முடியவில்லை, மளமளவென்று மாடி ஏறி, ஒலி கிளம்பும் அறையைக் கண்டறிந்து, கதவைத் தட்டுகிறாள்; திறக்கப்படுகிறது; உள்ளிருந்து வந்தவனை, அவளுடைய கோபத்தை, வெறும்பார்வையாலேயே போக்கிவிடக்கூடியவனாக இருக்கிறான். நல்லவனாகவே இருக்கிறான், அழகாகவும்கூட இருக்கிறான் எரிந்துவிழவேண்டும், பொறிந்துதள்ளவேண்டும் என்ற துடிப்புடன் வந்தவள், அவனுடைய தோற்றத்தைக் கண்டு, மென்மையைக் குழைத்துப் பேச்சை வழங்குகிறாள்,

"மேலே இப்படி ஒலியைக் கிளப்பியபடி இருக்கலாமா? என் வேலையைக் கெடுக்கிறீர்களே. இசைபற்றிய எண்ண ஓட்டம் தடைப்படுகிறது! ஏன் அப்படி ஒலி எழுப்புகிறீர்கள்?"

"அதுவா? அது...அது...நீங்கள், ஒரே பாடலைத் திரும்பத் திரும்பப் பாடுகிறீர்கள்—சில சமயம் அந்தப்பாடலின் ஒரே அடியைக் கூடத் திரும்பத் திரும்பப் பலதடவை பாடுகிறீர்கள்.....சலிப்பு ஏற்படும்படி.....அது ஏன்?"

"நான், பாடுகிறேன் என்ரு எண்ணுகிறீர்கள். பாடகர்களுக்கான புதுப் பாடல்களை இயற்றுகிறேன். அந்தப் பாடல்கள் எப்படி இருக்கும் என்பதைக் கண்டறிய, மெருகேற்ற, திரும்பத்திரும்பப் பாடுகிறேன்."

"பாடல்கள் பூனைவது மற்றவர்களுக்காகவா?"

"ஆமாம், திறமையாகவும் இனிமையாகவும் பாடக்கூடியவர்களுக்காக. அவர்கள் பாடுவதாலே அந்தப் பாடல்கள் புகழ்பெறும்—புகழ் பெற்ற பாடல்களை நாட்டுமக்கள் விரும்பி விலைகொடுத்து வாங்குவார்கள்"

"அப்படியா? இப்போது உங்களுடைய பாடலை; எந்த இசைவாணனும் வாங்கவில்லையா?"

"இல்லையே! ஒரு பாடல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கே ஏகப்பட்ட பணச் செலவு?"

"யாருக்கு பணச் செலவு?"

"எனக்குத்தான். நான் பணம்கொடுத்து வெளியிட்டதுதானே. பலரும் வாங்கினால், செலவழித்த பணமும் வரும், வருவாயும் கிடைக்கும். அது சரி, நீங்கள் என்ன...?"

"நானா? நான் ஒரு ஓவியன்...அதாவது ஓவியம் வரைகிறேன்.....வரைந்து வரைந்து திறமைபெற்றால், ஓவியனாகலாம் அல்லவா?"

"ஓவியமா! எனக்கு நிரம்பவிருப்பம் ஓவியம் காண. என்ன வரைந்திருக்கிறீர்கள்?"

அவன்தான் வரைந்திருந்த ஓவியத்தைக் காட்டினான்—ஒரு பூனையை குழந்தை தூக்கிவைத்துக் கொண்டிருக்கும் காட்சி. அந்த ஓவியம் மிக நன்ருக இருப்பதாக அவள் கூறினாள்; அவளுடைய இசைப் புலமையை அவன் புகழ்ந்தான். உலகமோ; இருவருடைய கலையையும் கண்ணெடுத்துப் பார்க்க மறுத்தது. அவர்கள் இருவரும் கண்படைத்த காரணத்தால், ஒருவர் கலையை மற்றவர் புகழ முடிந்தது; அதற்குக் காரணம், ஒருவர் உள்ளத்தில் மற்றவர் இடம் பெற்றதுதான்.

அதே வீட்டில் மற்ரோர் அறையில் மற்ரோர் ஓவியன்; திறமை மிக்கவன் என்ற நினைப்பு கொண்டவன்; நிலை, சாதாரணம்தான்.

அவன், பூனையும் குழந்தையும் என்ற ஓவியத்தைப் பார்த்துவிட்டு, ஏளனம் செய்கிரான். குழந்தை இப்படியா இருக்கும், பூனைகூடச் சரியாக இல்லையே என்று குத்தல் பேசுகிரான்; அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது, இளம் ஓவியனே, குற்றம் இருப்பதை எடுத்துக் காட்டியவருக்கு நன்றி கூறுகிரான்.

"அந்த ஓவியனுக்கு ஏன் அவ்வளவு பணிந்து போகிறீர்கள். உங்கள் ஓவியம் நேர்த்தியாக இருக்கிறது. இவன் யார், குறை கூற. இவனுடைய ஓவியங்கள் மட்டும், ஊரிலே ஓகோவென்று விலை போகின்றனவோ. இனி அவனிடம் பணிந்து போகக் கூடாது."

காரிகை, கண்டிப்பாகக் கூறுகிரான்; காதல் உணர்ச்சி அவளுக்கு அத்தனை சொந்தத்தை ஏற்படுத்தி வைத்து விடுகிறது.

பெரிய ஓவியனுடைய இயற்கைக் காட்சி ஒன்றை நல்ல விலை கொடுத்து, ஒருவர், வெளியூர்க்காரர் வாங்குகிரார்—பேட்ஸ் என்பது அவர் பெயர்...முன்னிலும் அதிக முடுக்காகி விடுகிரான் பெரிய ஓவியன்.

இளம் ஓவியன், கடை கடையாகக் கொண்டு போய்க் காட்டுகிரான் தன் ஓவியத்தை. கடைசியில் பெரிய ஓவியனுடைய சிபாரிசின் பேரில், ஒரு கடைக்காரர், வைத்து விட்டுப் போங்கள், யாராவது பார்த்து ஆசைப்பட்டால், விற்க முயற்சிக்கிறேன் என்று கூறி அனுப்பினர்.

"கவலைப்படாதீர்கள். காலம் இப்படியேவா இருந்து விடப் போகிறது. நல்ல காலம் பிறக்கும். நல்ல விலைக்கு ஓவியத்தை வாங்கப் போகிரார்கள் பாருங்கள்" என்று பெண், பரிவுடன் பேசி வந்தாள்.

நல்ல காலம் பிறந்தது. நல்ல விலைக்கு விற்க ஆரம்பித்தது. ஓவியம் அல்ல; அவளுடைய பாடல்கள்.

காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

பல பதிப்புகள் வெளிவந்தன; எல்லாம் உடனுக்குடன் செலவாயின, பணம் குவியலாயிற்று. அவளுக்கு மகிழ்ச்சிதான் — ஆனாலும் பூனையும் குழந்தையும் மட்டும் விலை போகவில்லையே என்ற விசாரம் அவளுக்கு.

ஒருநாள், டெலிபோனில் யாரோ பேசுகிறார்கள்— அவள் பதில் அளிக்கிறாள்.

"பேட்ஸ் இருக்கிறாரா?"

"இல்லையே. அப்படி ஒருவரும் இங்கு கிடையாதே."

"எட்டாம் நம்பர் வீடுதானே?"

"ஆமாம்"

"மாடி அறையில் இருக்கிறாரே...அவர் தான் பேட்ஸ்...தெரியாதா.....பரவாயில்லை... அவர் வந்ததும், நான் சொன்னதாகச் சொல்லுங்கள்..."

"நான் என்றால், யார்?"

"பேட்சுடைய நண்பன், அவனுடைய விடுதியில் தங்கி இருப்பவன். அவனுக்குத் தெரியும். உங்களுக்கு ஏன் அந்த விவரமெல்லாம். வந்த உடன் அவனைக் கேளுங்கள், கட்டு கட்டாக பாடற்புத்தகங்கள் வந்து குவிகின்றனவே, இடம்கொள்ளாமல் அவைகளை என்ன செய்வது? என்று கேளுங்கள். நான் குடி இருக்க இடமே கொஞ்சநாளில் இல்லாமல் போய்விடும்போல இருக்கிறது. அவ்வளவு கட்டுகள்—ஒவ்வொருநாளும் — ஒரே விதமான பாடல்.....அதுமட்டுமா, எத்தனை பெரிய படம், இயற்கைக் காட்சியாம், சிகப்பும், நீலமும், பச்சையும் மஞ்சளுமாக குழைத்து வைத்திருக்கிறார். அதை என்ன செய்வது.....?

"பாடல், யார் வெளியிட்டது? எந்தக் கம்பெனி?"

பாடல் வெளியிட்ட கம்பெனியின் பெயரை டெலிபோனில் அந்த ஆசாமி சொன்னதும், அவளுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. மாடி ஆசாமி ஓவியன் அல்ல —சீமான். அவன்தான், விலை போகாதிருந்த பாடல்களை வாங்கிக் குவித்துக்கொண்டிருக்கிறான் — தன்னை உற்சாகப்படுத்த. பெரிய ஓவியன் படத்தை வாங்கியதும் மாடி அறைச் சீமானேதான், என்பது புரிந்தது. கோபமும் வந்தது, ஒரு புன்னகையும் தவழ்ந்தது. அவனும் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டான் காரணமும் கூறினான்; காதல்.

அது மட்டுமா சொன்னான்? என்னுடைய ஓவியத்தைக்கூட விலை கொடுத்து வாங்க ஒருவர் முன்வந்திருக்கிறார். இதோ, கடைக்காரருக்கு, அவர் அனுப்பிய கடிதம் என்று கூறி ஒரு கடிதத்தைக் காட்டுகிறான். அவள் கூச்சத்துடன் தலை கவிழ்ந்தபடி நிற்கிறாள்—

இந்தக் கருத்துடன் தீட்டப்பட்ட சிறு கதை, நான் படித்தது. ஆடவனும் ஆரணங்கும், கதையில்; எனவே காதல், காரணமாக அமைந்தது. நான் வரையும் ஓவியங்களை நண்பர்கள் பார்த்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், என்னை மகிழச் செய்யவேண்டும் என்ற எண்ணம்தான்—வேறென்ன. அப்படிப்பட்ட பற்றும் பாசமும்கொண்ட நண்பர்களின் முகாமாக உள்ள கழகத்தில், இருக்கிறோம் என்பதிலே நாம் ஒவ்வொருவரும் பெருமிதம் அடையத்தான் செய்வோம். இவ்விதமான பற்றும் பாசமும், கலையாமல் குலையாமல் இருக்கும் வரையில், நமது கழகத்தை எத்தனை பெரிய வலிவுள்ளவர்கள் கூடித் தாக்கினாலும், அச்சமில்லை என்ற உணர்ச்சி என்னை ஊக்குவித்தபடி இருக்கிறது.

6—5—64

பகல் பொழுதைக் கழிப்பதைவிட, இரவுகள்தான் அதிகமாகத் தொல்லை தருகின்றன. அதிலும் இப்போது மிகக் கடினமாக இருக்கிறது. செங்காய்களைப் பறித்து வந்து; அவை கனிவதற்காக வைக்கோற் போரில் போட்டு ஒருஅறையில்போட்டு மூடிவைப்பார்கள். குமுறிக்கனிவதற்காக. இரவு, அறைகளிலே உள்ள நிலைமை இதுபோல். காற்று துளியும் கிடையாது. வியர்வை பொழிந்தபடி. இரண்டு மணிக்காவது முன்பு தூக்கம் வரும்; இப்போது மூன்று, நான்குகூட ஆகிவிடுகிறது. பகலில்உள்ளவெப்பத்தை, இயற்கையாகவீசும் காற்று தணியச்செய்கிறது; இரவில் ஒரே புழுக்கம். நாங்கள் உள்ள பகுதியில் உள்ள மரங்களில் சிலவற்றில் இலை உதிர்ந்து, மொட்டையாகி நிற்கின்றன. பாதாம் மரத்

விற்பனையாகிறது!

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

தின் இலைகள், பச்சையாக இருந்தவை, இரத்தச் சிகப்பாக மாறின; பார்ப்பதற்கு அழகாகவும் இருந்தது; ஆனல் சிகப்பு, கருஞ்சிகப்பாகி, மஞ்சள் கலந்ததாகி, சருகாகி, உதிர்ந்துவிட்டன. நான்கூட வேடிக்கைக்காக நண்பர்களிடம் இங்கே கூறினேன்—உங்களுக்கெல்லாம், எப்போது தெரியுமா? இந்த பாதாம்மரத்திலுள்ள மற்ற இலைகளும் உதிர்ந்ததும் என்று. இலைகள் உதிர்ந்து, மொட்டையாகி விட்ட அந்த மரம், இந்த நிலையில் தன்னை உலகம் விரும்பாது என்பதால் போலும் மறுபடியும் துளிர்க்கத் தொடங்கிவிட்டது. மரத்திலேயே கல்லறையும் தெரிகிறது, தொட்டிலும் தெரியத் தொடங்குகிறது. இங்கு உள்ள அரச மரம் முன்பு களைத்தும் இளைத்தும் காணப்பட்டது. இப்போது பச்சைப் பசேலென மாறிக்கொண்டுவருகிறது. தொலைவிலிருந்து பார்க்கும்போது, அந்த இலைகளை எடுத்துத் தடவி மகிழலாமா என்றுகூட ஆசை பிறக்கிறது. சற்றுத் தொலைவில், நாங்கள் உள்ள பகுதிக்கு வெளியே மற்றோர் அரச மரம் அந்த மரம், இந்த நேரத்தில், மொட்டையாகிக் கொண்டு வருகிறது; பத்து நாட்களுக்கு முன்பு இலைகள் அவ்வளவும் மஞ்சளாகி, காலைக்கதிரவன் ஒளியில் பொன்தகடுகள்போல காட்சி அளித்துவந்ததைக் கண்டேன். இப்போது, இலைகள் வேகவேகமாக உதிர்ந்துவிடக் காண்கிறேன்; வெகு விரைவில் மொட்டையாகி வருகிறது. அந்த அரசமரத்தில், காக்கைக்கூடு ஒன்று அமைத்துக்கொண்டிருக்கிறது, உச்சிக்கு அருகில். இங்கு அறையிலிருந்து பார்த்தாலேகூடத் தெரிகிறது. முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் நிலைபோலும். அதனல், காக்கை காவல் காத்தபடி இருக்கிறது; ஒரு காக்கை காவல் பார்க்கும் போது மற்றோர் காக்கை இறைதேட வெளியே செல்கிறது. முறை போட்டுக்கொண்டு வேலை பார்க்கின்றன. இதைப் பார்த்துவிட்டு எனக்குக் காட்டி, என்னையும் பார்க்கச் சொன்னவர் அன்பழகன். எதற்காகப் பார்க்கச் சொன்னரோ தெரியவில்லை. ஒருவேளை, காக்கை குருவிகள்கூட குடும்பத்தைக் கட்டிக்காத்து வருகின்றனவே, நீ, எங்களை எல்லாம் குடும்பத்தைக் கட்டிக்காத்திடும் கடமையையும் மறந்து சிறையிலே வந்து வாடும்படிச் செய்திருக்கிருயே, நியாயமா என்று கேட்கிருரோ! தெரியவில்லை. அவர் அவ்விதமான எண்ணம் கொண்டிருந்தாலும் கொண்டிராவிட்டாலும், பலருடைய குடும்ப வாழ்க்கையில், சோகப்புயல் வீசும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன்; ஆனல் அவர்கள் தங்கள் நெஞ்சு உரம் காரணமாக, அந்தச் சோகத்தைத் தாங்கிக்கொள்கிருர்கள் என்பதையும் நான் உணர்ந்து பெருமிதமடைகிறேன்.

நாட்டுமக்களை, இன்றுள்ளவர்களை மட்டுமல்ல, எதிர்காலத்தவர்களையும், வாட்டக்கூடிய ஒரு கேட்டினை எதிர்த்து, சிலராவது, தம்மைத்தாமே வருத்திக்கொள்வது, தூயதோர் தொண்டு என்ற உணர்ச்சி, தனிப்பட்ட வாட்டவருத்தத்தை விரட்டிவிடக்கூடிய, வலிவு கொண்டது, மேன்மை நிறைந்தது. கழக வளர்ச்சியைக் கெடுக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள், நமது அறப்போர் குறித்துக் கேலிபேசுவதை அறிந்து, துவக்கத்தில், சிறிதளவு துக்கப்பட்ட தோழர்கள்கூட, தாங்கள் சிறைபுகுந்திருப்பது, நல்ல காரியத்துக்காக, அதன் பலன், உடனடியாக இல்லாவிட்டாலும் ஓர் நாள் கனிந்தே தீரும் என்ற நம்பிக்கை பெறுகிருர்கள். இந்தி ஆதிக்கத்தைத் தமிழர்கள் எதிர்க்கின்றனர் என்று இன்று எடுத்துக்காட்டுவது மட்டுமல்ல, எதிர்ப்புணர்ச்சி காட்டப்பட்டது என்று என்றென்றும் கூறித் தீரவேண்டிய, ஒப்புக்கொண்டாகவேண்டிய ஒரு நிலை ஏற்படத்தான்போகிறது. கொடுமைகளை எதிர்த்து பல்வேறு நாடுகளில், பல்வேறு காலங்களில் சிறை சென்றவர்களைப்பற்றி பேசி, எழுச்சி பெறுவதிலே, தனி இன்பம் காண்கிறேம். இந்த சென்னைச்சிறையில், நான் இந்தி எதிர்ப்பு காரணமாகவே முதன்முதலாக 1939-ல் புகுந்தேன். அந்த நாட்களைப்பற்றி, நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். சிறையில், அப்போதும் இதேபோலக் கெடுபிடி இருந்ததா? என்று நண்பர்கள் கேட்டார்கள். இல்லை! அப்போது இருந்த முறையிலே பெரும்மாற்றம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அப்போது ஒரு பகுதியில்உள்ள நமது தோழர்கள் மற்றோர் பகுதியில் உள்ள நமது தோழர்களைப் போய் பார்த்துவிட்டுவரக்கூட அதிகாரிகள் அனுமதி அளித்தார்கள். வாராவாரம் நடத்தப்படும் 'பார்வையிடும்' சடங்கிலேகூட, எங்களை ஈடுபடுத்துவதில்லை. இப்போது, காங்கிரஸ் அரசுக்கு நாம் விரோதிகள், ஆகவே நாம் எவ்வளவுக்கெவ்வளவு கொடுமைகளை அனுபவிக்கிருமோ அவ்வளவுக்கவ்வளவு காங்கிரஸ் அரசு மகிழ்ச்சி அடையும் என்ற ஒரு இலக்கணத்தை வைத்துக்கொண்டே! சிறை நிர்வாகிகள் நடந்துகொள்கிருர்கள் என்று தோன்றுகிறது. முன்பு, இவர்கள் இந்தியை எதிர்க்கிருர்கள் என்று மட்டுமே, காங்கிரஸ் அரசு நினைத்தது; இப்போது, இவர்கள் இந்தியை அல்ல, காங்கிரஸ் அரசை எதிர்க்கிருர்கள் என்று நினைக்கிருர்கள். அந்த நினைப்பு காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்குக் கசப்பையும் கோபத்தையும் கிளப்பிவிடுகிறது. ஒரு கட்சி அரசு நடத்துவதை எதிர்த்து, ஆட்சி நடாத்தும் வாய்ப்பினை எமக்குத் தாருங்கள் என்று பொதுமக்களை அணுகிக் கேட்கும் உரிமைதான், ஜனநாயகத்துக்கு அடிப்படை. இந்த அடிப்படையில் நம்பிக்கை அற்றுப் போகிற காரணத்தால்தான், காங்கிரஸ் அரசையா எதிர்க்கிறீர்கள் என்று, காங்கிரஸ்காரர்கள் கனல் கக்குகிருர்கள். அந்தக் கனலின் சிறு பொறிகள், இன்றைய சிறை நிர்வாகத்தில் நிரம்பி இருக்கக் காண்கிறேன். முன்பு நிலைமை இப்படி இல்லை என்று நான் விவரம் கூறினேன்.

7—5—64

மாயவரத்திலிருந்து தருவித்த எண்ணெய் பல நாள் தடவியும், கைவலி நீங்கவில்லை. சலித்துப்போய் இன்று அந்த எண்ணெய் தடவிக்கொள்வதை நிறுத்தி விட்டேன். வெளியே வந்தபிறகு தக்கமுறையில் மருத்

துவம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நண்பர்கள் வலியுறுத்தினர்கள். நானும் அது தேவைதான் என்பதை உணருகிறேன்.

இராமாயணப்பிரச்சாரம், கதாகாலட்சேபமாக சென்னையிலும் வெளி இடங்களிலும் வேகமான அளவிலே நடத்தப்பட்டு வருவதுகண்டு, பெரியார் கடுங் கோபம் கொண்டுவிட்டிருக்கிறார்; எதிர்ப்பிரசாரத்துக் காகத் தொண்டர்படை நடத்தப்போகிறார் என்று செய்தி வந்திருப்பதுபற்றி இன்று நண்பர்கள் என்னிடம் பேசிக்கொண்டிருந்தனர். பெரியார், எந்த நேரத்தில் எவ்விதமான போக்குடன் நடந்துகொள்வார் என்பதை நம்மாலே கூறமுடியாது, ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், இத்தகைய எதிர்ப்பு காங்கிரசுக்குக் கேடாக முடியும் என்று அவருக்கு எடுத்துக்கூறப் பட்டால்போதும், தமது திட்டத்தை விட்டுவிடுவார். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், இராமாயண காலட்சேபம் செய்யும் கிருபானந்தவாரியாரும், இராமாயண எதிர்ப்புப்பிரசாரம் செய்யும் பெரியாரும், காங்கிரசுக்கே ஓட்டு சேகரிக்கும் காரியத்தைச் செம்மையாகச் செய்கிறார்கள். இராமாயண ஆதரவு இராமாயண எதிர்ப்பு எனும் இரண்டுமே, காங்கிரசுக்கு ஓட்டு பெற்றுத்தரப் பயன்படுகிறது. பகுத்தறிவாளர், பழமை எதிர்ப்பாளர், துடிப்புள்ளபோக்கினர் ஆகியோரிடம் பெரியார் இராமாயண எதிர்ப்புப் பிரசாரம் செய்யட்டும், கையோடு கையாகக் காங்கிரசுக்கு ஓட்டு திரட்டித்தரட்டும், பெற்றுக் கொள்ளலாம்; பழமை விரும்பிகள், பக்தர்கள் ஆகியோரிடை கிருபானந்தவாரியார் இராமாயண காலட்சேபம் சுவையாகச் செய்யட்டும், அதே மூச்சில், காங்கிரசுக்கு ஓட்டு வாங்கித்தரட்டும், பெற்றுக்கொள்ளலாம்; நமக்கு இந்த இரண்டு உக்திகளில் எது கெலித்தாலும் எது தோற்றாலும் கவலை இல்லை, நமக்கு வேண்டியது ஓட்டு, இருவரும் அதை நமக்கு வாங்கிக் கொடுக்கட்டும், என்பது இன்று தமிழகக் காங்கிரசை நடத்திச் செல்லும் முதல்வருடைய எண்ணம். நாட்டு மக்கள் மனதை, இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, நமக்கு வேண்டியது நாட்டை ஆளும் ஓட்டு வலிவு—அதை இராமனைக் கடவுள் அவதாரம் என்று கூறிக்கொள்பவரும், கபடவேடதாரி என்று கண்டிப்பவரும், நமக்காக அரும்பாடுபட்டு பெற்றுத்தர முன்வருகிறபோது, நாம் ஏன் அந்தப் பொன்னான வாய்ப்பை இழந்துவிடவேண்டும்—இராமாயண காலட்சேபமும் நடக்கட்டும், எதிர்ப்பும் நடக்கட்டும், என்று காங்கிரஸ் கட்சி கருதுகிறது என்பது குறித்து எடுத்துச் சொன்னேன்.

பெரியாரின் போக்கு எப்போது எப்படி வடிவமெடுக்கும் என்று அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏது—முன்போல. இன்று இந்தப் பேச்சு எழுந்தபோது அவருடன் இருந்த நாட்கள், பிரிந்துவந்த நிலை, இவை பற்றி எண்ணிப்பார்த்தேன். கணக்கெடுத்துப் பார்க்கும்போது; பெரியாருடன் இணைந்திருந்து நான் பணியாற்றிய காலத்தைவிட, அவரைவிட்டுப் பிரிந்து வந்து பணியாற்றிவரும் காலம் அளவில் அதிகம் என்பது தோன்றிற்று. நான் அவருடன் மிக நெருக்கமாக இருந்து பணியாற்றிய காலம் 1939லிருந்து 1949வரை — பத்தாண்டு காலம் — அவரை விட்டுப்பிரிந்து பணியாற்றத் தொடங்கி இப்போது பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கணக்கு பார்த்தபொழுதுதான், எனக்கே வியப்பாக இருந்தது—நேற்று பிரிந்ததுபோல ஒரு நினைப்பு இருந்துவந்தது-அது எத்தகைய பொய்த் தோற்றம் என்பதை, இந்தக் கணக்கு மெய்ப்பித்தது.

இன்று எனக்கு ஒரு புதிய நட்பு கிடைத்தது — எதிர்பாராத முறையில். நூற்றுக்கணக்கான சிட்டுக் குருவிகள் இங்கு உள்ளன என்பதுபற்றி முன்பு குறிப்பிட்டேன். அந்தக் குருவிகளில் ஒன்றை, பக்குவமாகப் பறந்து தப்பித்துக்கொள்ள முடியாததை, ஒரு காக்கை கொத்திவிட்டது-இங்குள்ளவர்கள் காக்கையைவிரட்டி குருவியைக் காப்பாற்றினர்கள்-என்னிடம் வந்து சேர்ந்தது. எனக்குத்தான், பறவைகள் வளர்ப்பதிலே மிகுந்தவிருப்பமாயிற்றே, குருவிகிடைத்ததாலே,மிகுந்த மகிழ்ச்சி. அதை எப்படி வளர்ப்பது என்பதுபற்றி நெடுநேரம் பேசி, நாளையத்தினம் ஒரு கூண்டு செய்வது என்று முடிவு செய்து, இன்றிரவு மட்டும் ஒரு பெரிய கூடையில் குருவியைப் போட்டுவைக்கலாம் என்று திட்டமிட்டோம். பகலெல்லாம், குருவியைப் பார்ப்பதிலேயும், அதற்குத் தீனி தருவதிலேயும் தனியான மகிழ்ச்சி பெற்றேன். மாலை, அறை பூட்டப்படுகிறபோது பெரிய ஏமாற்றம் என்னைத் தாக்கிற்று, குருவி எப்படியோ, எங்கேயோ பறந்துபோய்விட்டது. தேடிப்பார்த்து பயன்காணவில்லை. அந்தக் கவலையுடன் இன்றிரவைக் கழிக்கவேண்டியதாகிவிட்டது.

இன்று பிற்பகல், மதியை பெரிய மருத்துவமனைக்கு நாளையத்தினம் அனுப்பப்போவதாக, டாக்டர் கூறிவிட்டுச் சென்றார். என் கைவலிக்கும், ஊசி போட்டார்.

8—5—64

குருவி காணுமற் போய்விட்டது பற்றி நான் மிகுந்த கவலையாக இருப்பது தெரிந்த நண்பர்கள்,



இன்று விடிந்ததும், குருவியைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் குருவி, தப்பிச் சென்றதே தவிர, நீண்டதூரம் பறந்துபோக முடியாததால், காக்கைக்குப் பயந்துகொண்டு, என் அறைக்கு எதிர்ப்புறத்தில் இருக்கும் மாமரத்தில் பதுங்கிக் கொண்டிருக்கிறது. விடுவார்களா! பிடித்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள்—மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அதை மீண்டும் ஒருமுறை இழந்துவிடலாமா, ஆகவே உடனே, கூண்டு தயாரிக்கும் வேலையைத் தொடங்கினேம். தோழர்கள் கே. டி. எஸ். மணியும் ஏகாம்பரமும், இரண்டு அட்டைகளை, மூங்கில் குச்சிகள், தென்னை ஈர்க்குகளைக் கம்பிகளாக்கி, கூண்டாக மாற்றிவிட்டார்கள். உள்ளே குருவி உட்கார, ஊஞ்சல் போன்ற அமைப்பு—தீனிக்கு ஒரு சிறு குவளை — பல்பொடி டப்பா — மற்றோர் குவளை தண்ணீருக்கு! இத்தனை ஏற்பாடுகளையும் செய்து முடித்துக் கொடுத்தார்கள்-குருவி கூண்டிலே, முதலில் கவலையுடன் இருந்தது—ஆனால் மெள்ள மெள்ள இறை தின்னத் தொடங்கிற்று. அதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே, நீண்டநேரம் ஈடுபட்டிருந்தேன். என்ன இருந்தாலும் தன்னிச்சையாகப் பறந்து திரிந்து மகிழ்ந்துகொண்டிருந்த குருவியைப் பிடித்துக் கூண்டிலிட்டு இம்சிக்கலாமா; பாபம் அல்லவா என்று கேட்கத் தோன்றும் பலருக்கும், இந்தக் குருவி, இப்போதுள்ள நிலையில் வெளியே விட்டால், காக்கையால் கொத்தப்பட்டுச் சின்னபின்னமாகி விடும். ஆகவே இப்போது அதைக் கூண்டிலே போட்டிருப்பது, அந்தக் குருவிக்கே நல்லதுதான்.

பாபம் என்று கூறுவார்களே என்ற எண்ணம் எனக்குத் தோன்றுமலில்லை; இரண்டு நாட்களாக நான் படித்துக்கொண்டிருக்கும் புத்தகம், பாபம் என்றால் என்ன என்ற வினவுக்கு விடைகாணும் முயற்சிபற்றியது. சித்திரலேகா எனும் கதை; ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது; மொழிபெயர்ப்பு. சாம்ராஜ்யம் அமைத்து அரசாண்ட சந்திரகுப்தன் காலத்தையொட்டி பின்னப்பட்டுள்ள கதை. இதிலே, பாபம் என்றால் என்ன என்ற பிரச்சினை விவாதிக்கப்படுகிறது. அந்தப் பிரச்சினையைச் சுவையான ஒரு கதையாக்கித் தந்திருக்கிறார் ஆசிரியர்.

ரத்னம்பர் என்றோர் யோகி—அவருக்கு சிவதாண், விசால்தேவ் எனும் இரு சீடர்கள். உபதேசம் முடிந்து, சீடர்கள் குருவைவிட்டுப் பிரியும்நேரம்—அவர்களுக்கு ஒரு ஐயப்பாடு எழுகிறது. பாபம் என்றால் என்ன, என்பதுபற்றியே ஐயப்பாடு. குரு கூறினார், பாபம்பற்றிய விளக்கம் அவ்வளவு எளிதாகக் கூறிவிடமுடியாது, வெறும் தத்துவ விளக்கத்தால் மட்டும் புரிந்துவிடக் கூடியதல்ல, அனுபவத்தின்மூலம்தான், பாபம்பற்றிய விளக்கம் பெறமுடியும், வாருங்கள் உங்களை நான் அதற்கான 'யாத்திரை'யில் ஈடுபடுத்துகிறேன் என்று கூறி, மலைச்சாரிவைவிட்டுக் கிளம்பிச் சென்று, விசால்தேவ் எனும் சீடனை, குமாரகுரு எனும் யோகியிடம் அழைத்துச் சென்று, இவன் என் சீடன்—பாபம்பற்றி விளக்கம்பெற விழைகிறான், முற்றும் துறந்தவரான தங்களிடம் ஓராண்டு சீடனாக இருந்து அந்த அறிவு பெறட்டும் என்று கூறுகிறார். சிவதாண் என்பவனை, பாடலிபுரத்தில் காமக்களியாட்டத்திலே மூழ்கிக்கிடக்கும் ஒரு சீமான், பீஜகுப்தா எனும் பெயரினன், அவனிடம் அழைத்துச் சென்று விவரம் கூறி, அங்கு இருந்துகொண்டு, பாபம் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் பெற்றுக்கொள் என்று கூறுகிறார். இரு சீடர்களும் ஓராண்டுக்குப் பிறகு தன்னை வந்துபார்த்து பெற்ற பாடம்பற்றிக் கூறவேண்டும் என்பது குருவின் ஏற்பாடு.

பாடலிபுத்ரம் முழுவதும் மதிப்பு மிகப்பெற்ற யோகி குமாரகிரி-சாணக்கியரிடமே தத்துவார்த்த வாதம் புரிகிறார்-அரச அவையில் தனி இடம் பெற்றவர்-முற்றுந்துறந்தவர்,

பாடலிபுரத்திலேயே இவனைப்போலக் குடியிலும் கூத்தியரிடம் கூடிக்கிடப்பதிலும் எவரும் இல்லை என்ற பெயரெடுத்தவன் பீஜகுப்தா. பீஜகுப்தா ஆடலழகி சித்ரலேகாவிடம் மையல் கொண்டு, அவளுடன் காமக் களியாட்டம் நடத்திக்கிடப்பவன். அங்கு சிவதாண்.

சித்திரலேகா ஆடற் கலையில் வல்லவள்—பேரழகி—மன்னர் அவையிலும் மாளிகை வட்டாரத்திலும், அவளுடைய அழகொளி கலையொளி, புகழொளி பரவி இருந்தது. பொற்கொடி போன்ற சித்திரலேகா, இளம் விதவை; பார்ப்பன குலம்.

ஒவ்வொரு நாளும், சித்திராவும் பீஜகுப்தாவும் மது அருந்தி, மகிழ்ச்சியில் மூழ்குவர்—பாப விளக்கம் பெற வந்திருந்த சிவன், மதுவை உட்கொள்ள மறுக்கிறான், சில நாட்கள், துவக்கத்தில். சித்திரா சிரிப்பொலி காட்டுகிறாள், அவன் மதுக் கிண்ணத்தைத் தூக்கிக் கொள்கிறான், போதையின் இனிமையைப் பெறுகிறான் இவன் என்று கெக்கலி எழுகிறது.

காமக் களியாட்டத்தில் ஈடுபட்டுக் கிடக்கும் அந்த இருவரிடமும், யோகியிடம் சீடனாக இருந்து மிகுந்த உபதேசம் பெற்ற சிவன், துளியும் வெறுப்பு கொள்ளவில்லை, கோபம் கொள்ளவில்லை—பீஜகுப்தாவின் தாராளத்தன்மையும், சித்ராவின் லலிதமும் அவனை அவ்விருவரிடம், மிகுந்த நட்புகொள்ளச் செய்கிறது.

ஒருநாள் அரச அவையில் தத்துவவிவாதம்—சாணக்கியன் ஒருபுறம், குமாரகிரி போன்ற யோகிகள் மற்றோர்புறம்.

அண்ணன்,

அண்ணாதுரை

[தொடரும்]

★ நாடற்றோர் ★

—கனகு—

கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தேமுன்தோன்றிய மூத்த குடி என்று கூறப்படும் தமிழின், கங்கைகொண்டான் கடாரம் வென்றான், இமயவரம்பன் ஈழம்வென்றான் என்று போற்றப்படும் தமிழன் இன்று நாதியற்ற நிலையில் நடுத் தெருவில் தள்ளப்பட்டு உள்ளான். வாலாறே காணுததொருபேரின்னல் இன்று தமிழர்பால் வந்துற்றுவாதை மிகப் புரிவதில் வலிமை காட்டுகின்றது. பதினுயிரக்கணக்கான தமிழர்கள் பர்மா நாட்டிலிருந்து துரத்தப்படுகிறார்கள். அவர்கள் கட்டியகந்தலோடு, ஒட்டிய வயிறினராய், குழந்தை குட்டிகள் சூழ்ந்துவர செய்வது யாது என்று தோன்றுதோராய் தெருத் தெருவாய் அலைகிறார்கள் என்ற தீச்செய்தி கேட்டுக் கலங்கிய தமிழ் நெஞ்சங்கள் கசிந்துருகிக் கண்ணீர் வடித்திருக்கும் வேளை பிறிதொரு பேரிடி வெள்ளிடியாகத்தமிழ் உள்ளத்தைப் பெயர்த்தெறிய வந்து விழுந்துள்ளது.

நாகர்களுக்கும், யக்கர்களுக்கும் வழித்தோன்றல்களாக வந்து நல்லது அறியாத சிங்கள மக்கள் நலிந்துகிடந்த வேளை, அவர்கள் வாழும் இடம் எங்கணும் சூழ்ந்து செறிந்துகிடந்த ஆளண்டாக் காடுகளை அழித்து உதவியோர் தமிழ் மக்கள். அங்கே நாடு கண்டவாறே சிங்களவர்க்கு நாகரிகத்தையும் படித்துத் தந்தவர்கள் தமிழர்கள். பெற்றமும், கழுதையும்கூட வாழ விழையாத பீழைமிகுந்த சூழல்களையெல்லாம் பெருநகராக்கித் தந்தவர்கள் தமிழர்கள்.

நன்றிகெட்ட சிங்களவர்களால் அந்தத் தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு நடுத்தெருவில் நிறுத்தப்பட்டபோது அதை நாம் நம்ப முடியாமல் திகைத்தோம். என்றாலும் எதிர் காலத்தில் அந்தநிலை மாறும் என்ற எண்ணம் நம் உள்ளத்தைவிட்டு மாறாமல்தான் இருந்தது.

இன்று அந்த எண்ணம் பொய்த்துப்போய்விட்டது. எதிர்பாராத பேரின்னல் இன்று தமிழுணர்வு உள்ளார் அனைவரையும் வந்து சூழ்ந்துகொண்டுவிட்டது. உலகத்தில் எந்த இனத்தாரும் கண்டறியாத துன்பத்தை இன்று தமிழர்கள் அடைந்து தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஐந்தே கால் இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகையுடைய சில நாடுகளே உலகிலிருக்கும்போது ஐந்தேகால் லட்சம் மக்களை — அவர்கள் தமிழர்கள் என்ற ஒரேஒரு காரணத்துக்காக சிங்கள வெறியர்கள் நாடு கடத்தத் திட்டம் போட்டிருப்பது நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட செயல். மனிதாபிமானத்துக்கு மிக மிகப் புறம்பானதொரு செயல்.

ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட அந்த நாளில்-அதாவது இப்போது எந்த ஐந்தேகால் லட்சம் தமிழர்களை இங்கே ஏற்றுக்கொள்வதாக சாத்திரி அரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றதோ அந்தத் தமிழ் மக்களின் கொள்ளுப் பாட்டன்மாரைப் பெற்றோர்கள் இலங்கைத் தீவின் ஆளண்டாப் பகுதியாய்க்கிடந்த மலைப்பிரதேசத்தில் உழைக்கப் புகுந்தகாலை, அவர்கள்பால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் தலையாய வாக்குறுதி அவர்கள் எந்தக் காடுகளை அழித்து நாடாக்குகின்றார்களோ அந்தப் பகுதியில் அவர்கள் நிரந்தரமாகக் குடியேறிக்கொள்ளலாம் என்பதாகும். அப்படி அங்கே காடுகெடுத்து நாடாக்கச் சென்ற தமிழர்கள் — இன்று வெறியைத் தவிர வேறெதுவும் தெரியாத வெளிமடை இராசரத்னம் போன்ற சிங்களவர்கள் விகசிதமான உயர்வாழ்வு வாழ்வதற்கான வளத்தையும், நலத்தையும் அங்கே வாரிவழங்க தங்கள் வியர்வையையும், இரத்தத்தையும், உயிரையும் விரவித்தந்து உழைத்த தமிழர்கள் ஏறத்தாழ ஐம்பது லட்சம் பேர்களாவர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப் பகுதி தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை இலங்கையில் உழைக்கச் சென்ற ஐம்பது லட்சம் தமிழர்களில் ஏறத்தாழ இருபது லட்சம் பேர் மலைப் பகுதிகளில் பெரும்பாரம் தாங்கி, ஏறி இறங்கி உழைக்கின்றபோது ஏற்படுகின்ற விபத்துக்கள் காரணமாகவும், அங்கு அப்போதைக்கப்போது வந்து தாக்கும் பல்வேறு கொள்ளை நோய்கள் காரணமாகவும் உயிர் போக்கிவிட்டதன் மூலம் தங்கள் உடல்களைத் தேயிலைச் செடிகளுக்கும். இரப்பர் மரங்களுக்கும் உரமாக வழங்கிவிட்டுப் போயுள்ளனர்.

இவ்வாறு இறந்தோர் போக இருபதாம் நூற்றாண்டின்தொடக்கத்தில் இந்தியர் என்ற இலச்சினை மாருமல் இலங்கையில் எஞ்சியிருந்த தமிழர்கள் முப்பது லட்சத்துக்கும் மேற்பட்டோராவர். அவர்களில் இந்தியா என்ற தேசம் எந்தத் திசையிலிருக்கின்றது என்று தெரிந்தவர்கள் சிலர், தெரியாதோர் பலர். அந்த இரு திறத்தாரிலும் பெரும்பாலோர் இந்தியா திரும்ப விழைந்தனர் காரணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு இலங்கையின் நடவடிக்கைகள் அந்தத் தமிழர்களின் நியாயமான உரிமைக்கு முரணுக அமைந்ததேயாகும். அதே வேளை தமிழகத்திலிருந்து யாரும் ஈழம் செல்லக்கூடாது என்று அன்றைய இந்திய அரசு தடையும் விதித்தது. அந்தத் தடையினைக் கண்ட அப்போதைய இலங்கை அரசு மகிழ்ந்தது; மருண்டு பதறியது. உடனே தமிழர்க்குப் புதிய தொரு வாக்குறுதி கொடுத்ததன் மூலம் இலங்கை மலைப் பகுதிக்குத் தமிழர்கள் செல்லக் கூடாது என்ற தடையினை இந்தியா நீக்குமாறு செய்தது. எனினும் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றோர் அதன் பின்னர் — சில ஆயிரக் கணக்கில்-மிகக் குறைந்த தொகையினரேதாம். ஆனால் இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் திரும்பி வந்த தமிழர்கள் பலர். இது ஒருபுறமிருக்க 1939-ம் ஆண்டு வரை தமிழர்கள் இலங்கைக்குச் செல்லக் கூடாது என்று இந்திய அரசு மூன்று முறை தடைவிதித்திருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் இலங்கை அரசின் வேண்டுகோளின் மீதே அந்தத் தடைகள் நீக்கம் பெற்றுள்ளன. கடைசியாக இந்திய அரசு 1939-ல் போட்ட தடை இன்றளவும் நிரந்தரமாக நடைமுறையிலிருந்து வருகிறது.

இங்கிலையில் இந்திய வம்சா வழியினர் என்ற இலச்சினையோடு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் பதிந்திருந்த 30 லட்சம் தமிழர்களில் பெரும்பாலோர் தமிழகத்துக்குத் திரும்பியது போக 1939-ம் ஆண்டு வாக்கில் இலங்கையில் எஞ்சியிருந்த இந்திய வம்சா வழியினர் என்ற

தமிழர்கள் ஏறத் தாழ பனிரண்டு லட்சம் பேர்களாவர். இவர்களில் சில நூறு தமிழர்கள் தவிர மற்றெல் லாரும் பதினெட்டாம் நூற்றாண்டில் இலங்கைக்குச் சென்று அந்த நாட் டின் வாழ்வுக்காகவும், வளத்துக் காகவும் தங்கள் உழைப்பையும், உடலையும், உயிரையும் தத்தம் செய்த தமிழ்ப் பெருமக்களின் வழி வந்தோராவர். தமிழர்களால் எங்கள் வாழ்வு பறிபோகின்றது என்று வெற்றுத்தனமாக இன்று வெறிக் கூச்சல்போடும் சிங்களவரின் மூதா தையர் சோம்பிக் கிடந்த காலத் தில், அந்தச் சோம்பர்களின் எதிரே சுறுசுறுப்பில் சிற்றெறும்பையும் விஞ்சியவர்கள் என்று எடுத்துக் காட்டாய் விளங்கி உழைத்த தமிழர் களின் வழி வந்த தமிழர்கள் அவர் கள். மழையைக் கண்டால் ஓடியும், வெயிலைக் கண்டால் ஒதுங்கியும், உழைப்பைக் கண்டால் அஞ்சியும் இன்றைய வெறியேறிய சிங்கள வரின் மூதாதையர் மூலைவீட்டில் காலைக் கட்டிக் கிடந்த வேளையில், பேய் மழையும் புறமுதுகிட்டோடும் படி தலையில் கம்பளிகூட இல்லா மல், நடுக்கும் குளிரையும் பொருட் படுத்தாமல் மலையேறி உழைத்து உயிர் கொடுத்த தமிழர்களின் வழி வந்த தமிழர்கள்அவர்கள். கொளுத் தும் வெயிலைக் குளிர் பதன அறை யாக எண்ணி--அதில் வாடிக் கருகி —உழைக்காமல் உண்டு கொழுத் தோர்க்கு ஊட்டம் வழங்குதற்கென கொட்டும் வியர்வையைத் துடைக் கவும் நேரமின்றி, உடல் கெட்டு விழும் வரை உழைத்து உழைத்து ஓடாகி மாண்டுவிட்ட உயர் தமிழர் களின் வழிவந்த தமிழர்கள் அவர் கள் 'வேலைக்கு வா, சோறு போடு கிறோம்' என்று அழைத்தால் 'எங்க ளுக்கு வேலை செய்ய முடியாது. சோறும் வேண்டாம். காட்டில் கிடைக்கும் பலாக்காயும், மரவள் ளிக் கிழங்குமே போதும்' என்று சிங்களவர்கள் திண்ணை தூங்கி களாய் முடங்கிக் கிடந்த வேளை 'வேலையா, உழைப்பா? இதோ நாங் கள் இருக்கின்றோம், என்று புதல் மண்டிக் கிடந்த பகுதிகளில் எல் லாம் பெரிய பெரிய தொழிற்சாலை களை நிறுவிக் கண்ட பேராண்மைத் தமிழர்களின் வழி வந்த தமிழர்கள் அவர்கள். இந்திய வம்சா வழியினர் என்ற பெயரைத் தவிர வேறு எதனு லுமே இந்தியாவுக்கும் இவர்களுக் கும் தொடர்பு கிடையாது என்பது உலகறிந்த உண்மை. தமிழகத்தில் சொந்தமும், தொடர்பும் உள்ளோர் எல்லாம் ஏற்கெனவே ஈழத்தி லிருந்து தமிழகத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

இந்திய வம்சாவழியினர் என்ற முத்திரையோடு இப்போது இலங் கையிலிருக்கும் எந்தத் தமிழருக் கும்—சிலநூறு விதிவிலக்குகளைத் தவிர—இலங்கைத் தீவையன்றி வேறு எந்த நாடும் சொந்த நாடாக முடியாது. இப்படிப்பட்ட தமிழர் களில் ஐந்தேகால் இலட்சம்பேரைத் தமிழகத்துக்குத் துரத்தியடிக்கும் ஒப்பந்தத்தில் சாத்திரி மகிழ்ச்சி யோடு கையெழுத்திட்டிருக்கிறார். மற்றொரு ஒன்றரை இலட்சம் தமி ழரை மாட்சிமை தங்கிய சிரிமா வோவும் சாத்திரியும் தங்கள் அர சியல் விளையாட்டின் மண்பொம்மை களாகப் பணயம் எடுத்திருக்கிறார் கள். இவர்கள் 'இருவரும் கூடிப் பேசப் புகுந்தபோதே தமிழ் மக் களின் வாழ்வைக் குலைக்கும் பெரும்பேரிடியொன்று விழக் காத் திருக்கின்றது என்பதை உண் மைத் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் உண்மையளவில் எதிர்பார்த்துத் தானிருந்தன. எதிர்பார்த்த பேரிடி விழுந்துவிட்டது.

ஏற்கெனவே இந்திய அரசின் அலட்சியப் போக்காலும், கையா லாகாத் தனத்தாலும் பர்மாவி லிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் அந்தத் தமிழர் களுக்கும் இங்கே — நீங் களே வேலை தேடிக்கொள்ளுங்கள் என்ற கட்டளையோடு முகாம்களி லிருந்து வெளியேற்றப்படுவதும், இன்னும் சிலர் சிற்சில இடங்களில் யாசித்து வாழ்வதும் கண்கூடான காட்சிகள். வந்திருக்கும் சில ஆயி ரம் தமிழர்களின்கதியே இதுவானால் வரவிருக்கும் இலட்சக் கணக்கான தமிழர்களின் கதி என்னுகும் என் பதைத் தமிழ் நெஞ்சங்கள் சற்றே ஓர்ந்து பார்க்கவேண்டும். அதிலும் இலங்கையிலிருந்துவரும் தமிழர் களை தமிழகத்தில் மட்டும் குடியேற் றப் போவதில்லையாம். அவர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங் களுக்கும் அனுப்பப்படுவார்களாம். பிறந்த ஊரிலேயே, நல்ல தமிழ்ச் சூழலில் காலமெல்லாம் வாழ்ந் திருந்த மக்கள், பிற நாடாகிவிட்ட இந்தியத் துணைக்கண்டத்துக்குத் துரத்தியடிக்கப்பட்டுவிட்டதோடு கூட மொழியாலும், பழக்க வழக் கங்களாலும் முற்றிலும் புதிதான அறிமுகமில்லாத, ஒவ்வாத ஒரு சூழ லில்குடியேற்றப்பெறுவார்களானால் அவர்கள் தமிழர்கள் என்ற தூய தன்மையை இழப்பதோடுகூட அவர்தம், வாழ்வே வெறுமையாகும் வகையில் நாடோடிகளினும் கேடு சூழ்ந்த நாடோடிகளாகி நலிவுப் பெருஞ்சுமைக்கு இலக்காவதைத் தவிர வேறு வழியே இருக்கமுடி யாது. இது ஒருபுறமிருக்க,

ஆண்டுதோறும் முப்பத்தாருயி ரம் தமிழ் மக்கள் இலங்கையி லிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று ஒப்பந்தத்திலிருப்பதாகப் பத் திரிகைகள் எல்லாம் வெளியிடுவ தற்குமுன்னரே இலங்கையில்போய் இறங்கியதும் மாட்சிமைதங்கிய சிரி மாவோ நாற்பதாயிரம் தமிழர்கள் ஆண்டுதோறும் விரட்டியடிக்கப்படு வார்கள் என்று வெற்றி எக்களிப் போடு கூறியிருக்கிறார். எடுத்த எடுப்பே இப்படி இருக்கிறது. இனிப் போகப்போக, தமிழர்க்குச் சாவு மணி கட்டிவிட்டிருக்கும் இந்தத் திட்டம் எப்படி எப்படி எல்லாம் தமி ழரின் வாழ்வைக் குலைத்து அவர் களைப் பேரவலத்துக்குள்ளாக்கக் காத்திருக்கின்றதோ!

பதினைந்தாண்டு காலம் என்று வரம்பு கட்டியிருக்கும் பெரிய மனி தர்கள் தமிழ் மக்களை மாக்களாகக் கூட மதிக்கவில்லை. அவர்களை வெறும் மண் பொம்மைகளாக மதித்திருக்கிறார்கள். இல்லையென் றால் ஐந்தேகால் லட்சம் தமிழர்கள் 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஐந்தே கால் லட்சமாகத்தான் இருப்பார் கள் என்று அவர்கள் கணித்திருக்க முடியுமா? இந்த அழகில் 'இது வெறும் கூட்டல், கழித்தல் போன்ற கணிப்புச் சிக்கல் அல்ல; மனிதாபி மானப் பிரச்சினை' என்று ஒப்பந் தத்தை முடித்துக்கட்டி கையெழுத் துப்போட்டுவிட்ட பின்னர் ஒரு பெரிய மந்திரி கூறியிருக்கிறார். வேறொரு மந்திரியோ 'மிகவும் கஷ் டப்பட்டுக் கண்ட முடிவு இந்த முடிவு' என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். என்னே இவர் களின் பேரறிவாண்மை!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

முழுத் திருப்தியை அளித்துவிடாது. மத்திய ஆட்சி மொழிகளாக வளம் பெற்ற எல்லாத் தேசீய மொழி களும் ஏற்கப்படும்வரை, நிலையான, திருப்திகரமான முடிவு ஏற்பட்டதாகக் கருத முடியாது. என்றாலும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சி இந்த அளவுக்காவது பலன் தந்திருக்கிறதே என்பது நமது ஊக்கத்தை வளர்த்திடச் செய்யும். கிளர்ச்சி களைக் கட்டுப்பாடாகவும், அமைதியும் ஒழுங்கும் கெடாத முறையிலும், வன்முறை எழாத தன்மை யிலும், காவல் துறையினருக்கும் கிளர்ச்சிக்காரர் களுக்கும் பகை உணர்ச்சி ஏற்படாத தன்மையிலும், கொடுமைகளும் குரூர நிகழ்ச்சிகளும் ஏற்படாத விதத் திலும், பொதுச் சொத்துக்கு நாசமும், சமூகத்தில் கலவரமும் பீதியும் ஏற்படாதபடியும் நடத்திச் செல்ல முடியாமற் போய்விட்டது மனவேதனையைத் தரு வதாகும். கிளர்ச்சிகள் தொடங்கும்போதே அடக்கு முறை வீசப்படும் என்பதனை அனைவரும் அறிவர்; அடக்குமுறையைக் காரணமாகக்கொண்டு வன்முறை தலைதூக்க இடம் கொடுத்ததால், கிளர்ச்சி என்ற பேச்சே மனக்கிலேசத்தை மூட்டிவிடுவதாக ஆகிவிட் டது. இது மிக மிக வருந்தத்தக்க நிலையாகும். சமூக விரோத சக்திகள் எந்தத் தூய்மையான கிளர்ச்சி யையும் உள்ளே நுழைந்து கெடுத்துவிடும், சமூகத் துக்குக் கேடு செய்துவிடும் என்பதனைக் கண்டு எவரும் கவலையும் கலக்கமும் கொள்ளாமலிருக்க முடியாது. எனவே, ஒரு இடைக்கால ஏற்பாடு, என்ற முறையிலே இருமொழிக் கொள்கை அமைகிறது என்ற போதிலும், இதிலே முழுத் திருப்தி கொள்வது இயலாது என்ற போதிலும், நிரந்தரமான நிலையான தீர்வு தேசீய மொழி கள் யாவும் ஆட்சிமொழிகளாவதிலேதான் இருக்கிறது என்றாலும், பெற்ற வெற்றி பெறவேண்டிய வெற்றி களுக்கு வழி அமைக்கிறது என்ற முறையில் இந்த இருமொழிக் கொள்கையைக் கொள்ளவேண்டி இருக்கிறது. தேசீய மொழிகள் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற நிலையான தீர்வு ஏற்பட அமைதியும் ஒழுங்கும், கண்ணியமும் கட்டுப்பாடும் மிக்க முறை யில், காந்தீய நெறியில், அறவழியில் பணியாற்றி வர வேண்டும். இடைக்கால ஏற்பாடுபோன்ற இருமொழிக் கொள்கை நல்ல வடிவம்பெற்று, நேர்மையாக நடத்திக் காட்டப்படுமானால், அது இப்போதைக்கு உடனடியாக ஏற்பட்டுவிட்டிருக்கக்கூடிய இந்தி ஆதிக்கத்தின் பிடி யிலே ஒரே அடியாகச் சிக்கி, ஆங்கிலத்தின் துணையை யும் இழந்து எல்லா வகையாலும் இடரும் இழிவும் பெற்று நலிந்துபோகவேண்டியதைத் தடுத்து நிறுத்து கிறது. இருமொழிக் கொள்கை, மொழிப் பிரச்சினைக் கும் சிக்கலுக்கும் தீர்வுகாட்டவில்லை என்றபோதிலும், உடனடியாக உருட்டி மிரட்டிக்கொண்டு வந்துகொண் டிருக்கும் இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த, கட் டுப்படுத்தத் துணை செய்கிறது. இந்த இருமொழிக் கொள்கை சட்டவடிவம் பெற்றபிறகு மேலும் இது குறித்து கருத்தறிவிக்க வாய்ப்புக் கிடைக்கப்பெறும். இப்போதைக்கு, ஒரு பிடிவாத நிலையிலிருந்து இந்தியப் பேரரசு, சமரசம் தேடும் நிலைக்கு வந்திருப்பது, குறிப் பிடத்தக்க ஒரு வெற்றிஎன்றே கொள்ளவேண்டும். இது வும் கிடைக்காதுபோயிருப்பின் இந்தி ஆங்கிலத்தைமிக விரைவிலே விரட்டிவிட்டு, தனது ஆதிபத்தியத்தைச் செலுத்தி நம்மைத் திக்குமுக்காடச் செய்துவிட்டிருக் கும். இப்போதைக்கு அபாயநிலைமை நீங்கியிருக்கிறது— உலக மொழியான ஆங்கிலம் தொடர்ந்து துணை ஆட்சிமொழியாக இருந்துவர சட்டம் கிடைக்கிறது. இந்தி ஆட்சிமொழி என்பது அகற்றப்படவில்லை; ஆனால் இந்தித்திணிப்பு, இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத் தப்பட்டிருக்கிறது என்பதுதான் இருமொழிக்கொள்கை யினால் நாம் எதிர்பார்க்கக்கூடிய பலன்.

இது முழுவதும் திருப்தி தருவதல்ல, நிலையான பரிகாரம் தேடியாகவேண்டும் என்பது உண்மை என்றபோதிலும், இதற்காக இனி மாணவர்கள் கிளர்ச்சி நடத்தத்தேவையில்லை என்பதனைப் பரிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மொழிப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு காண்பதற்கான வழி முறைகளை வகுப்பதிலும், நடத்திச்செல்வதிலும், கட்டுப்பாட்டுடன் வன்முறை எழாதமுறையில், அறநெறியில் பணியாற் றத்தக்க சூழ்நிலையை உருவாக்கிடவும், தொடர்ந்து பணியாற்றவும் மாணவர்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் பணியாற்றிடும் மற்றவர்களிடம் பிரச் சினையை விட்டுவிடவேண்டும். பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம், மாணவர்கள் மேலும் கிளர்ச்சிகளில் ஈடுபடவேண்டாமென்று, மாணவர்களின் மொழிப்பற் றினையும், எழுச்சியினையும் வரவேற்றுப் பாராட்டி துணைநின்ற எல்லா இதழ்களும் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதனை மாணவர் சமுதாயம் கவனித்து கிளர்ச்சி இனி இல்லை என்று அறிக்கை வெளியிட் டிருப்பதனை போற்றி வரவேற்காதார் இல்லை. வழக் கறிஞர்கள், பொதுமக்களிடம் தொடர்புகொண்ட தலை வர்கள், இதழாசிரியர்கள் பொதுமக்கள் ஆகியவர் அனைவரும் இந்தப் பிரச்சினையில் அக்கரைகொண்டு விட்டனர்.

பாராளுமன்றத்திலே நடைபெற்ற பேச்சுகளை நுணுகி ஆராய்ந்து பார்ப்போர்; புதிய திருப்பம் ஏற்பட் டிருப்பதை உணருவார்கள். சிலர் இந்தி ஆதிக்கம் உடைபட்டுப் போகிறதே என்ற எரிச்சலில் பேசியுள் ளனர் என்றபோதிலும், பொறுப்புள்ள பலர், இந்தித் திணிப்பு காரணமாக இந்தியா உடைபடும் என்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது — இந்தியா முக்கியம் இந்தி அல்ல என்று பேசியிருப்பது, பொருள் நிரம்பிய பேச்சாகும்.

இந்தியா ஒன்றுபட இந்தி என்பது பழைய பேச்சு! இப்போது எழுந்துள்ள கேள்வி, இந்தியாவா இந்தியா, எது தேவை என்பதாகும்; இதற்குப் பெரும்பாலார் தந்துள்ள பதில், இந்தியா முதலில் என்பதுதான். இந்த புதிய திருப்பத்துக்கு எல்லா முதலமைச்சர்களும் இசைவு அளித்திருப்பது காண்கிறோம்.

நமது கழகத்தின் கொள்கையை நண்பர் மலை கரன் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியபோது, எழுந்த குறுக்கீடுகள், பிடி தளருகிறது என்பதனை உணர்ந்து எரிச்சல் கொண்டவர்களின் எக்காளம். இது, பாராளுமன்றத்தின் பெரும்பான்மை யினரின் கருத்தை எடுத்துக் காட்டுவது அல்ல.

இதற்கு முன்பு எப்போதும் இந்தி எதிர்ப்பாளர் களைக் கண்டிப்பதிலேயே அக்கரைகொண்டு, திறமை யைக் காட்டி, இந்தி ஆதரவாளர்களின் கண்சிமிட்ட லிலே சொக்கிப்போயிருந்த பல காங்கிரஸ் உறுப்பினர் கள், இம்முறை, உணர்ச்சியுடன் வாதாடவும், தமிழக நிலையை விளக்கவும், தி. மு. கழகத்தின்மீது குற்றம் கூறிவிடுவது பிரச்சினையைத் தீர்த்திட உதவாது என்று அறிவுறுத்தவும், இந்தித் திணிப்புக்குத் தமிழர் அனைவரும் எதிர்ப்பாளரே என்று இடித்துக் கூறவும், சந்தேகத்துக்கும் அச்சத்துக்கும் இடம் இல்லாதமுறை யில், சட்டம் திருத்தப்பட்டாகவேண்டும் என்று

வலியுறுத்தவும் முற்பட்டது காண மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொள்ளமுடிகிறது.

முழுக்க முழுக்க இந்தி வட்டாரம் என்று கருதத்தக்க மாநிலத்தவர்கூட, இப்போது நிலைமையை உணர்ந்து, தங்களின் பழையபோக்கை மாற்றிக் கொள்ள முன்வந்துள்ளனர்.

இந்தி மொழியில் விற்பன்னரும், கவிவாணரும், முன்னாள் இராஜ்யசபை உறுப்பினரும், இப்போது பகல் பூர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக உள்ளவருமான இன்கர் என்பவர், இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதால், இந்தியாவில் ஒற்றுமை குலையும் என்று தெரியுமானால், இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படும் திட்டத்தைக்கூட விட்டுவிடவேண்டியதுதான் என்று கூறியிருக்கிறார்.


பீகார் மாநிலத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றும் இருவர், என்னைக்கண்டு பேசியபோது (25—2—65)ம், இதனை வலியுறுத்திப் பேசினர். இந்தியால் ஒற்றுமை உணர்வு ஏற்படும் என்று எண்ணினோம், இப்போது நாங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டோம்; இந்தியால் இந்தியாவின் ஒற்றுமை கெடக்கூடாது என்பதிலே பீகாரில் பொறுப்புள்ள பலருக்கும் எண்ணம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது என்று கூறி, தின்கர் அவர்களின் பேச்சைச் சான்றாக எடுத்துக் காட்டினர்.

அவர்களுடன் உரையாடும்போது, நானும் அவர்களிடம் கூறினேன்—"இந்தி ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டும் என்பதற்காக வாதாடுவோர்களிடம் எங்களுக்கு ஒரு பகையும் இல்லை, தகராறும் இல்லை; சர்க்காரின் போக்குதான், இந்திக்காரர், இந்தி பேசாதார் எனும் இருசாராருக்கும் ஒருசேர, மனக்குமுறலை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. இந்திக்காரர்களிடம் இந்தச் சர்க்கார் 1965-ல் இந்தியே ஆட்சிமொழி என்று நம்பிக்கையுடன் பேசிப்பேசி, அவர்கள் மனதிலே எழுச்சியை மூட்டிவிட்டது; அதேபோது, இந்தி பேசாத பகுதியினரான எங்களிடம், இந்தியைத் திணித்துவிடமாட்டோம், உங்கள் சம்மதம் பெறுமல் ஆங்கிலத்தை நீக்கிவிடமாட்டோம், காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிக்கும் என்று பேசி, எங்கள் மனதிலே நம்பிக்கையை ஏற்படுத்திவந்திருக்கிறது. இவ்விதமாக இருகுரலில் பேசிடும் போக்கின்விளைவே இன்றைய நெருக்கடி என்பதனை விளக்கினேன். அந்த பீகார் நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். தெரிவித்துவிட்டு தி. மு. கழகத்தின் மொழிக்கொள்கை என்ன என்று கேட்டனர். ஆட்சிமொழிகளாக தேசிய மொழிகள் யாவும் சட்டத்தில் இடம்பெறவேண்டும்; அதற்குக் காலம்பிடிக்கும் ஆகையால், அதுவரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும், இதுதான் கழகக்கொள்கை என்று கூறினேன். அவ்விதம் ஆனபிறகும் ஒரு இணைப்பு மொழி வேண்டுமே, அது எது? என்று கேட்டனர். தேசிய மொழிகளெல்லாம் ஆட்சிமொழிகளானபிறகும், ஆங்கிலத்தை எவரும் புறக்கணித்துவிடப்போவதில்லையே, இந்தியே ஆட்சிமொழி ஆகவேண்டும் என்பவர்கள்கூட ஆங்கிலம் பயிலவேண்டும் என்றுதானே கூறுகிறார்கள், அந்த ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருந்துவிடட்டுமே என்றேன், அவர்கள் அதிலே முழுத்திருப்தி பெறவில்லை நம்முடைய மொழிகளிலே ஏதாகிலும் ஒன்று இணைப்பு மொழியாக இருப்பது நல்லதல்லவா என்றனர்; நான் தேசிய மொழிகளிலே ஏதேனும் ஒன்று இணைப்பு மொழியாக வரவேண்டும் என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கவேண்டும், இயற்கையாக அந்த நிலை வரவேண்டும், சர்க்காரின் துணையுடன் ஒரு மொழி அந்த நிலையைப் பெறக்கூடாது; மக்களே முடிவுசெய்யவேண்டும், என்றுகூறினேன். அவர்கள் அதிலே மகிழ்ச்சி பெற்றனர்.

புதிய திருப்பம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்பதனை மெய்ப்பிக்கும் பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றேன். முதலமைச்சர்களின் முயற்சியும் இந்தப் புதிய திருப்பத்தின் விளைவுதான். இனி இது குறித்து எத்தகைய சட்டவடிவம் கிடைக்கிறது என்பதனைக் கண்டறிந்து மேலால் என் கருத்தைக் கூறுகிறேன். இப்போதைக்கு, ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதனை மட்டும் எடுத்துக்காட்டுவதில் மகிழ்ச்சிகொள்கிறேன்.

பிற, பிறகு.

அண்ணன்,



விற்பனையாளர்களுக்கும் சந்தாதார்களுக்கும்

'காஞ்சி' அலுவலகத்தின் அச்சு இயந்திரம் பழுதடைந்த காரணத்தினால் கடந்த இரண்டு வாரங்களாக 14-2-65, 21-2-65 இதழ்கள் வெளிவரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொங்கல் விடுமுறை காரணமாக கடந்த திங்கள் 17-1-65, 24-1-65, 31-1-65 ஆகிய மூன்று இதழ்களும் நிறுத்தப்பட்டிருந்தது.

—உரிமையாளர்

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.